

# தூய ஆவியில் பயணம்

2010 ஐப்பசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியில் பயணம்

**ஐப்பசி மாதம் 2010**

**"உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவுமில்லை"**

ISSN 1391 - 5975

வெளியிடுபவர்
சிறி ஒஸ்கா அபயரத்ன அடிகளார்
கிது தன புபுதுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2010 ஐப்பசி மாதம் தூய ஆவியின் பயணம்

**செபத்திற்கு கை கொடுத்தல்**

**"மனம் திரும்புங்கள் இறையரசு நெருங்கி விட்டது"**

இதன் கருத்து மனித மட்டத்தில் நாம் தேடிச் செல்லும் வழியை மாற்றுவதாகும். செல்லும் வழியை மாற்றுங்கள். சந்தோசம், மகிழ்ச்சி, எதிர்பார்ப்புகள் ஏற்படுத்தச் செல்லும் வழியை மாற்றுங்கள்.

எம் வாழ்க்கைப் பயணத்தில் நாம் முகம் கொடுக்க நேரிடும் கஷ்டங்கள், முடியாமைகள் அநேகம் இருக்கின்றன. ஆகையால் எதற்கும் எவருக்கும் கட்டுப்படாத வழியை நாம் தேர்ந்தெடுத்து இருக்கின்றோமா? அது எமக்கு மிகவும் உதவியாக அமையும்.

**'மனம் திரும்புதல் என்றால் நாம் செல்லும் வழியை மாற்றுவதாகும்'**

**"என் பின்னே வாருங்கள்"**

என்ற இறைவனின் வார்த்தை எமது பிரச்சினைக்கு நல்லதொரு பதிலாகும்.

அவரது பின்னால் செல்வது என்றால் யாருடனும் பற்றுதல் இல்லாமையாகும். அது விடுதலைக்கு வழிபிறக்கின்றது.

அருட் திரு. ஒஸ்கா அபேரட்ண அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**01 வெள்ளி**

முதலாம்வெளிப்பாடு

எசாயா 66 : 10-14

பதிலுரைப்பாடல்

திபா 131:1-3

நற்செய்திவெளிப்பாடு

புனித மத்தேயு

18 : 1 - 5

சின்னக் குழந்தை திரேசாவின் விழா

**பரிசுத்த நற்செய்தி**

அந்நேரத்தில் சீடர்கள் இயேசுவை அணுகி விண்ணரசில் மிகப் பெரியவர் யார்? என்று கேட்டார்கள். அவர் ஒரு சிறுபிள்ளையை அழைத்து அவர்கள் நடுவில் நிறுத்தி, பின்வருமாறு கூறினார். நீங்கள் மனம் திரும்பிச் சிறுபிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், விண்ணரசில் புகமாட்டீர்கள் என உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். இந்தச் சிறுபிள்ளையைப் போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர். இத்தகைய சிறுபிள்ளை ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும்என்னையே ஏற்றுக் கொள்கிறார்

**ஒளியில் விழிப்புறுதல்**

அன்பின் தூய ஆவியானவரே! இந்நற்செய்தியின் பகுதியின் வரும் மறை இரகசியமான வார்த்தைகளைத் தியானிப்பதற்கு பெலயீனனான என்னை வழிநடத்தும். தன்னோடு நெருங்கி வாழ்ந்த அருகில் இருந்த சீடர்களின் இந்தக் கேள்வி இயேசுக்கிறிஸ்து ஆண்டவரை விழிப்புற வைத்து விண்ணரசில் மிகப்பெரியவர் யார்? என்பதனை சிறு குழந்தை மூலம் தெளிவாக விளங்கப்படுத்துகின்றார். விண்ணரசில் பெரியவர் யார்? என்பதனை விளக்கமுன் விண்ணரசிற்குள் எப்படிப்பட்டவர்கள் நுழையலாம் என்று எடுத்துக் கூறுகின்றார். ஒரு சிறு குழந்தையைப்போல் இதயம் இருக்க வேண்டும் என்பதனை புரியவைக்கும் இயேசு *'நீங்கள் மனம் திரும்பி சிறுபிள்ளையைப் போல் ஆகாவிட்டால், விண்ணரசில் புகமாட்டீர்கள்'* என்று கூறுகின்றார். யார் யார் தன்னைத் தாழ்த்தி மரியன்னையைப்போல் வெறுமையில் வாழ்கின்றார்களோ அவர்கள்தான் விண்ணரசில் மிகப்பெரியவர் என்று உறுதியாகப் பதில் அளிக்கின்றார்.

**எமது பேரில்**

கிறிஸ்தவ மறுமலர்ச்சி மக்களாகிய நானும், நீங்களும் சீடரைப்போல் பெரியவராக வேண்டும் என்பதில் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றோமா? கள்ளம் கபடமற்ற சிறுகுழந்தையுடைய உள்ளம் வேண்டும் என்று கூறும் ஆண்டவருக்கு நாம் அளிக்கும் பதில் என்ன? எம்மை நாமே தாழ்த்தி நான் என்ற அகந்தையில் இருந்து வெறுமையாகி தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி அவர் அரசைக் கட்டியெழுப்புவோம்.

**செபத்திற்குள்ளாகுதல்**

எல்லாம் வல்ல இறைவா எம்மை நாம் தாழ்த்திக் கொண்டு வாழ பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பொழிந்தருளும்.

**என் பார்வையில்**

**ஆண்டவரே என் உள்ளத்தில்**
**இறுமாப்பு இல்லை செருக்கு**
**இல்லை எனக்கு மிஞ்சின அரிய**
**பெரிய செயல்களில் நான்**
**ஈடுபடுவதில்லை;**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**02 சனி**

முதலாம்வெளிப்பாடு

விப 23 :20-23

பதிலுரைப்பாடல்

திபா 91: 1-6,10-11

நற்செய்திவெளிப்பாடு

புனித மத்தேயு

18: 1 - 5,10

புனித காவல் தூதர்கள் நினைவு

**பரிசுத்த நற்செய்தி**

அந்நேரத்தில் சீடர்கள் இயேசுவை அணுகி விண்ணரசில் மிகப் பெரியவர் யார்? என்று கேட்டார்கள். அவர் ஒரு சிறுபிள்ளையை அழைத்து அவர்கள் நடுவில் நிறுத்தி பின்வருமாறு கூறினார். நீங்கள் மனம் திரும்பிச் சிறு பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சிறு-பிள்ளையைப் போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர். இத்தகைய சிறு பிள்ளை ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக் கொள்கிறார். இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருத வேண்டாம். கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

**ஒளியின் விழிப்புறுதல்**

அன்பின் ஆவியானவரே, இயேசு ஆண்டவரின் பரிவுகொண்ட திருவுளத்தைத் தியானிக்க இவ்வேளையில் உம் அருட்கொடைகளைப் பொழிந்தருளும். இறைவனானவர் ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாவலாகவும் உதவி செய்வதற்காகவும் தம் அன்பிற்கு உட்படுத்துவதற்காகவும் ஒவ்வொரு காவல் தூதரை தெரிவுசெய்து அனுப்பியுள்ளார். இந்த உண்மையில் எமக்கு விசுவாசம் உண்டா? அவர் விருப்பப்படி நாம் வாழ்ந்து அவரோடு இணைந்து இறை அன்பைப் பெற்றுக்கொள்ள தாகம் கொள்வோம்.

இயேசுவின் சீடர் அவரைப் பின்தொடரும் பொழுது பெறும் கௌரவத்தையிட்டு அவர்கள் மத்தியில் யார் மிகப் பெரியவர் என்ற போராட்டம் ஆரம்பமாகிறது. இயேசு அவர்களுக்குக் கொடுக்கும் பதிலோ சிறு பிள்ளைகளைப் போல தூய்மையான உள்ளமும் கீழ்ப்படிவும் நேர்மையும் கொண்டவர்களை மிகப் பெரியவர்கள். சிறு பிள்ளைகளைப் போல கபடமற்ற உள்ளமும் தந்தையில் தங்கி வாழ்பவர்களே மிகப்பெரியவர்கள் எனப் பதில் அளிக்கின்றார். இயேசுவின் பதில் மனம் திரும்புவதையும் மனஸ்தாபத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. கள்ளம் கபடமற்ற நிலையில் மற்றவரை பெலயீனங்களுடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பான்மையை இயேசு எடுத்துக்காட்டுகின்றார்.

**எம்பேரில்**

இயேசுவின் விருப்பம் அறிந்து அவற்றிக்கு ஏற்ப வாழும் நற்குணம் என்னில் உண்டா? இறையரசுப் பணியில் நான் பதவி, பெருமை கௌரவம் எதிர்பார்த்து செயல்படுகின்றேனா? அழைப்பை உணர்ந்து என் ஆற்றலை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கின் றேனா? எம் வாழ்வில் நாம் தீய சிந்தனைகளுக்கு உட்படும்பொழுது தூய ஆவியின் வல்லமையை வேண்டி அவரில் விழிப்புறுவோம். மனமாற்றத்திற்காகத் தாகம் கொள்வோம். அன்பு இயேசுவின் அருளால் அனைத்தும் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் சிறு குழந்கைளைப்போல் அப்பா தந்யைின் திருக்கரங்களைப் பற்றிப் பிடித்துக்கொள்வோம். மனமாற்றம் ஒப்புரவு எம் வாழவில் முக்கிய அருட்சாதனமாக வேண்டும். நல்ல கிறிஸ்தவனாக *உம் விருப்பத்தை தவிர எனக்கு வேறு ஏதுவும்இல்லை* என்ற வார்த்தைகளில வாழ்வோம்.

**செபத்திற்குள்ளாகுதல்**

அன்பின் தந்தையே, பெலயீனரான எம்மைப் பார்த்து இறை அரசிற்காக உழைக்க அழைக்கின்றீர். உம் அழைப்பை ஏற்று அதற்கு பதில் அளித்து உமது ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்த்திட உம் தூய ஆவியினால் எம்மை அபிசேகம் செய்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**03 ஞாயிறு**

முதலாம்வெளிப்பாடு
ஆபக்கூக்
1:2-3. 2:2-4

பதிலுரைப்பாடல்
தி.பா 95:1-2. 6-9

2 தீமோ 1:6-8. 13-14

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக் 17: 5-10

பொ. கா. 27ம் ஞாயிறு

இறை தகப்பனுடை உன்னதமான இறைத்திட்டத்திற்கு உள்ளாகியவாறு பயணமாவதானது உண்மையான நேர்மையானதாகும். நேர்மையாளர் எனக் கூறிக்கொள்பவர் கண்ணுக்குத் தோன்றுகின்ற, உணர்வினால், உணர்கின்ற தாம் நினைக்கின்ற வற்றுள் ஒருபோதும் வாழ்பவராக இரார். அவர் நம்பிக்கை, விசுவாசம், எதிர்பார்ப்பு என்பவற்றுள் வாழ்பவராவார். எமது விசுவாச வாழ்க்கையை மீளப் பார்ப்பதற்கான சவால் இன்றைய வெளிப்பாடுகள் வழியாக விளக்கப்படுகின்றன. *கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால்....* விசுவாசம் இறைவனுடைய கொடையாகும். அது யாதார்த்தத்தைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான ஒளியாகும். ஏழாவது கண்ணாகும். புதிய அனுபவத்திற்கு உள்ளாவதற்கான கதவைத் திறந்து விடுகின்ற திறவுகோலாகும். விசுவாசம் உயிருள்ளதாகும். விசுவாசமின்றி ***உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை*** என்று உறுதியாகக் கூறிவிடமுடியாது. அறிவு, வாதாட்டம், என்பவற்றை மேப்பட்டுச்செல்லுகின்ற விசுவாச அனுபவத்துடன் இறைவனுடன் ஒன்றிப்பதற்கான வரத்தினை ஆவியானவரிடம் வேண்டுவோம்.

**முதலாவது வெளிப்பாட்டிலிருந்து..**

**ஆண்டவரே எத்துணைக் காலத்திற்கு நான் துணை வேண்டிக் கூக்குரலிடுவேன். நீரும் செவிசாய்க்காதிருப்பீர்....? ஆண்டவர் எனக்கு அளித்த மறுமொழி இதுவே. காட்சியை எழுதிவை..... குறித்த காலத்தில் நிறைவேறுவதற்காக சாட்சி இன்னும் காத்திருக்கின்றது. முடிவை நோக்கி விரைந்து செல்கின்றது. ஒருக்காலும் பொய்க்காது. அது காலந்தாழ்த்தி வருவதாகத் தோன்றினால், எதிர்பார்த்துக் காத்திரு. அது நிறைவேறியே தீரும். காலம் தாழ்த்தாது**

**ஒளியின் விழிப்புறுதல்**

''பபிலோனியரது கொடுமைகளைத் தாங்க முடியாதவராக கலக்கமடைந்தவராக இறைவாக்கினரான அபக்கூக்கு இறைவனிடம் கூக்குரலிட்டவாறு வினா எழுப்புகின்றார். பழிவாங்க வேண்டியபோதும் இறைவன் அமைதியாக இருக்கின்றார். அவரது உள்ளத் தெளிவு போதும். ஆண்டவரது இடமளிப்பதன் விருப்பத்தை பற்றிய தெளிவு இறைவாக்கினருக்கு இல்லைபோலும். ஆயினும், அப்பா, பிதாவானவர், திருமுன்தோன்றி நிற்கின்றவர். ஆண்டவரது பதில் பேரில் பிரமாணிக்கமுடைய வராகின்றார். தமது விருப்பத்தை ஆண்டவரது விருப்பத்திற்கு அடிப்பணிய வைக்கின்றார். படைப்பாளரது கணம் வரும் வரை பொறுமையுடனும், எதிர்ப்பார்ப்புட னும் இருப்பதற்கான வழிகாட்டுதலை ஏற்று பணிக்கின்றார்.

இறைவனுடைய தரிசனமானது வார்த்தைகளோடு மாத்திரம் நின்றிடவில்லை. இயேசுக்கிறிஸ்து கர்த்தர் உன் தரிசனமாவார். அவரது வருகையைப் பற்றிய வாக்குறுதியாகும் இது. ஆண்டவர் எம்மை எடுத்துச் செலுத்துகின்ற பயணத்தின் போது, முகம் கொடுக்க நேரிடுகின்ற கலவரங்கள், போராட்டங்கள், பிரச்சினைகள் என்பவற்றின் எமது பிரதிச் செயல் என்ன? ஆவியானவரே எம்மை எமக்குத் காண்பித்தருளும்.

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*திருத் தூதர்கள் ஆண்டவரிடம் எங்கள் நம்பிக்கை மிகுதியாக்கும் என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவர் கூறியது கடுகளவு நம்பிக்கை உங்களுக்கு இருந்தால், நீங்கள் இந்த முசுக்கொட்டை மரத்தை நோக்கி நீ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வேரோடே பெயர்ந்து போய்க் கடலில் வேரூன்றி நில்; எனக் கூறினால், அது உங்களுக்குக் கீழ்படியும்......எனச் சொல்லுங்கள்.*

**ஒளியின் விழிப்புறுதல்**

தந்தையின் அரசைப்பற்றிய நற்செய்தியைப் போதிக்கின்ற இறைமகன் இயேசு தமது சீடர்களது விசுவாச வாழ்வுக்கு சவால் விடுக்கின்றார்.... தங்களது விசுவாச வாழ்க்கையை அதிகரிக்கச் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்ற சீடர்களுக்கு, அவர் அளித்த பதில் சவால் மிகுந்ததாகும்... '*கடுகளவு நம்பிக்கை உங்களுக்கு இருந்தால்....???* இந்த பதில் அவர்களது குறைவான விசுவாசத்திற்கு அளிக்கப்பட்டதா? குறைவற்ற விசுவாசத்தோடு தங்களிடம் எதனையுமே கேட்டால், அது நிறைவேறும் என்பதற்கு அவர் சாட்சி பகர்கின்றார். தமது அன்றாட வாழ்க்கை அனுபவத்தினூடாகவே தமது சீடர்களோடு கதைக்கின்ற இயேசு ஆண்டவர், தங்களுக்குக் கீழ்படிந்தவராக இறை விருப்பத்தை மாத்திரம் நிறைவேற்றுவதற்காக விழிப்புறுத்தலுடன் இருந்த விதமும், தந்தைக்குரிய மகிமை, உரிமை என்பவற்றை அவருக்குக் கொடுப்பதற்கு தயங்கவில்லை என்பது அவரது வார்த்தைகள் வழியாக வெளிப்பாடாகின்றன. தந்தைக்கான புகழ்ச்சியும், நன்றியும் எப்போதும் அவரது உள்ளரங்கத்தில் தளிர் விட்டுக்கொண்டிருந்தன.

**எனது புத்திரத்தன்மை**

ஆண்டவரது புத்திரத்தன்மையானது எப்போதும் தந்தைக்கே உகந்ததும், பிரியமுள்ளதானதாகவும் இருந்தது. அது புத்திரத்தன்மையின் அழைப்பு எனக்கும், எமக்கும் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆயினும், எனது வாழ்க்கையில் குடிகொண்டுள்ள சந்தேகம், அவநம்பிக்கை, அவிசு-வாசம், அச்சம், தாழ்வு மனப்-பான்மை, தன்பழிக்குற்ற உணர்வு போன்ற எம்முன் அரசோச்சுகின்றன. புகழ்ச்சி, வரவேற்பு என்பவற்றை எதிர்பார்க்கின்றேன். நான் எனது பாவத்தை கூறுகின்றேன். ஆவியானவரே, இந்தப் பரிதாபகமான நிலையில் இருந்து விடுதலையாவதற்கு எனக்குதவியருளும். நான் அவரோடு இணைந்திருப்பதற்காகக் கூறிக்கொண்ட போதிலும்,அவர் வாழ்ந்தவாறு வாழுவதற்கான வரத்தினைத் தந்தருளும்.

**இரண்டாம் வெளிப்பாட்டிலிருந்து**

...உனக்குள் எழுந்த கடவுளின் அருட்கொடையினைத் தூண்டி எழுப்புமாறு நினைவுறுத்துகிறேன். கடவுள் நமக்கு கோழையுள்ளத்தினை அல்ல, வல்லமையும், அன்பும் கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தையே வழங்-கியுள்ளார். எனவே நம் ஆண்டவருக்கு நீ சான்று பகர்வதைக்குறித்தோ, அவர் பொருட்டு நான் கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்கமடைய தேவையில்லை. கடவுளின் வல்லமைக்கேற்ப நற்செய்தியின் பொருட்டுத் துன்பத்தில் என்னுடன் பங்குகொள்.

**ஒளியின் விழிப்புறுதல்**

நற்செய்திக்காக வேண்டி துன்புறுவதற்காகத் தாகமுடையவராக இருந்த பவுலடிகளார் இயேசுவுக்கு எத்துணை உரிமையாகியிருந்தார். உயிர்த்த ஆண்டவர் பவுலடிகளாரது வாழ்க்கையில் செயற்பட்டவாறு சங்கத்தினூடாக பல செயல்களைப் புரிகின்றார். ஆண்டவரால் கிடைக்கப்பெற்ற அருள் கொடைகளால் பற்றிக் கதைக்கின்ற அவர் இயேசுவைப் போலவே ஆவியானவரினால், நிரம்பியிருக்கின்றார். மேலும் ஆண்டவரின் பொருட்டு கைதியாவதற்கு வெட்கமடையாத அவரது உள்ளரங்கத்தில் பாரியதொரு மாற்றத்தை ஆவியானவர் ஏற்படுத்தியுள்ளார். உயிர்த்த ஆண்டவர் பேரில் முழுமையுள்ள நம்பிக்கையுள்ளவராகச் செயற்படுகின்றார்.

**செபம்**

ஆவியானவரே இறை தகப்பனுடைய மறை இரகசியமானதும், பரிசுத்தமானதுமான திருமுன்தோன்றி நின்றவாறு அவரது திருவிருப்பத்தைச் செயற்படுவதற்கான வல்லமையைத் தந்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**
**ஐப்பசி**
**04 திங்கள்**
முதலாம்வெளிப்பாடு
கலாத்தியர்
1 : 6 - 12
பதிலுரைப்பாடல்
திபா
111: 1-2, 7-10
நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
10 : 25 - 37
அல்லது
கலாத் 6:17-18
தி.பா 16:1-2,5,7-8,11
மத் 11: 25-30

புனித அசிசி பிரான்சிஸ் நினைவு

திருச்சபையானவள் இன்று அசிசி நகர் புனித பிரான்சிஸ் அடிகளாரின் திருவிழாவைக் கொண்டிடுகின்றனர். இத்தாலி அசிசி என்னும் நகரத்தில் 1182ம் வருடத்தில் பெரிய பணக்கார குடும்பத்தில் பிறந்த அவர் இயேசு ஆண்டவரைச் சந்தித்து அந்த அனுபவத்துடன் புதியதொரு வாழ்க்கைக்கு உள்ளான அவர் தமது தந்தையிடம் இருந்து கிடைத்த எல்லாச் சொத்துக்களையுளும் கைவிட்டு எளிமையான வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார். அவருடைய எளிமையான வாழ்க்கை திருச்சபைத் தலைமைகளுக்கு ஒரு சவாலாக அமைந்தது. இருளில் வாழும் மக்களை இயேசுவிடம் எடுத்துச் செல்ல கிறிஸ்துதானம் செய்ய ஆரம்பித்து இயேசுவுக்கு சாட்சியாக வாழ்ந்து 1226ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4ம் திகதி அப்பா தந்தையின் அரவணைப்பிற்குள்ளானார்.

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

**திருச்சட்ட அறிஞர் ஒருவர் அவரை சோதிக்கும் நோக்குடன் "போதகரே நிலையான வாழ்வை உரிமையாக்கிக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்... அவர் மறுமொழியாக "உன் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. உன்மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்று எழுதியுள்ளது" என்றார். இயேசு "சரியாகச் சொன்னீர். அப்படியே செய்யும். அப்போது வாழ்வீர்" என்றார். (முழுமையாக வாசிக்கவும்)**

**ஒளியின் விழிப்புறுதல்**

தூய ஆவியானவரே வாரும். அசைந்தாடும் இயேசுவின் உள்ளரங்கத்தைக் காண எம்மை வழிநடத்தும். அப்பா தந்தையின் அன்பில் மூழ்கியிருந்த அவர் அப்பா அன்பாய் இருப்பதுபோல், அப்பா அவரின் உருவத்திற்கமைய படைத்த எல்லா மக்களும் அன்பாய் வாழ வேண்டும் என விரும்புகின்றார். கணத்திற்கு கணம் அப்பாவின் திருமுன்னிலையில் தோன்றி நின்று அப்பாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதே அவரின் உணவாகக் கொண்டார். அவரை சோதிக்கும் நோக்குடன் திருச்சட்ட அறிஞர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் அவர் உன் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் ஆண்டவருக்கு அன்பு செய். நீ உன் மீது அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என உவமையின் மூலம் எடுத்துக்காட்டி இன்று எம்மையும் விழிப்பூற்றுகின்றார்.

**எமது பேரில்**

இறை அரசிற்காக தேர்ந்து எடுத்த எமக்கு எதற்காக அழைப்பு விடுக்கின்றார்? எமக்காக, தமது உயிரையே தியாகம் செய்து அன்பு செய்ததுபோல ஆண்டவருக்கு அன்பு செய்யவதுடன், அயலவர்களுக்கும் அன்பு செய்ய அழைப்பு விடுக்கின்றார். நாம் இருக்கும் நிலைக்கு விழிப்புறுவோம். நாம் இருக்கும் நிலையை எடுத்துக் காட்ட தூய ஆவியானவருக்கு இடமளிப்போம். *ஆண்டவரின் அன்பு நான்கினையும் எமது உணவாக்கி* அந்த அன்பினை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள தாகத்தை ஏற்படுத்திக்கொள்வோம்.

**செபத்திற்குள்ளாகுதல்**

அன்பின் ஆண்டவரே உமது திருக்குமாரனின் அன்பில் மூழ்கி உன்னதமான அன்பு நான்கினையும் எமது உணவாக்கி அந்த அன்பை மற்வர்களுடன் பகிர்ந்து உமது விருப்பத்தினை நிறைவேற்றும் வல்லமையை எமக்குத் தந்தருளும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**05 செவ்வாய்**

முதலாம் வெளிப்பாடு
கலாத்தியர்
1: 13 - 24

பதிலுரைப்பாடல்
திருபா
139 : 1-3, 13 -15

நற்செய்தி வெளிப்பாடு
புனித லூக்கா
10: 38 - 42

கத்தோலிக்க ஆசிரியத் தினம்

**பரிசுத்த நற்செய்தி**

அவர்கள் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது இயேசு ஓர் ஊரை அடைந்தார். அங்கே பெண் ஒருவர் அவரைத் தம் வீட்டில் வரவேற்றார். அவர் பெயர் மார்த்தா..... "ஆண்டவரே நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னை தனியே விட்டு விட்டாளே. உமக்கு கவலையில்லையா? எனக்கு உதவி புரியும்படி அவளிடம் சொல்லும்" என்றாரல். ஆண்டவர் அவரைப் பார்த்து "மார்த்தா மார்த்தா நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால், தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்து தெடுத்துக்கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது" என்றார்.

**ஒளியின் விழிப்பு**

இயேசு ஆண்டவரின் உள்ளாந்தரத்தை உற்று நோக்கும் போது அவருடைய வார்த்தைகள் ஒரு சவாலாக அமைந்துள்ளது. ஒற்றுமை இல்லாத இடத்தில் அவரை எமக்குச் சந்திக்க முடியாது. அவருக்கு எவ்வளவு ஊழியம் செய்தாலும் காணிக்கைகளைச் செலுத்தினாலும், அவை அனைத்தும் இறைவன் முன்னிலையில் ஒன்றுமேயில்லை. எதற்கெடுத்தாலும் குற்றங்களை கண்டு பிடித்துக்கொண்டிருப்பவர்கள் இறை சாட்சியாளராக முடியாது. இறையழைப்பின் மகிமையை வீணடித்துக் கொண்டிருக்கின்றோம் அல்லவா? பணிவிடை புரிவதும் விருந்தும் உடல் தேவையை நிறைவேற்றும். ஆனால், இறைவார்த்தையை உள்ளரங்கத்தைத் தேவையை நிறைவேற்றுவதுடன் மறுஉலக வாழ்வின் மறை இரகசியத்தை தெளிவுபடுத்தும் மார்த்தாவின் மனித மட்ட செயலைக்கண்டு இயேசு இறைவன் பக்கம் திரும்பிப்பார். என் தாயைப்போல மற்றவர்களும் சட்டங்களை மாத்திரம் கடைபிடிக்காமல், நற்குணங்கள் அன்பு, பொறுமை, வெறுமையாகுதல் போன்றவற்றைக் கடைப்பிடித்து இறை சித்தத்தை நிறைவேற்றும் பொழுது என் தாயைப்போல அதிகம் பேறுபெற்றோர் ஆவார்கள் என இயேசு எண்ணியிருப்பார்.

**எம் பேரில்**

எமது வாழ்க்கையில் இறைவார்த்தைக்கு இடம் கொடுப்பதற்கு தாகம் இருக்கிறதா? இறை வார்த்தையை வாசிப்பதற்கும் தியானிப்பதற்கும் நேரத்தை ஒதுக்கியுள்ளோமா? இறைவார்த்தைகளை மக்கள் மத்தியில் எடுத்துக்கூற பின் வாங்கியுள்ளோமா? விழிப்புறுவோம். பாவம், நீதி, தீர்ப்பு என்ன வென்பதைப் பற்றித் தூய ஆவியானவர் வரும்போது வெளிப்படையாக்குவார். தலையான பாவங்கள், உள்மனக் காயங்கள், பழக்கப்பட்ட பாவங்கள், மறைந்திருக்கும் பாவங்கள் என்பவற்றை அறிந்துதிருக்குருதியின் அபிஷேகத்திற்கு உள்ளாகுவோம். வல்லமையற்ற நிலையில் செயற்படும் எம்மை வல்லமையுள்ளவர்களாகுவதற்கு தூய ஆவியினாவரின் வழிநடத்தலை கேட்டு செபிபோம்.

**செபம்**

அப்பா தந்தையே! கணத்திற்கு கணம் எம்மோடு இருக்கின்ற எமக்குள் இருக்கின்ற தூய ஆவியானவருக்கு விழிப்புற்று வாழ வரம் தந்தருளும். இறைவார்த்தையை ஆழமாக தியானித்து அதன்படி வாழ கற்பித்தருளும். அதனை மற்றவர்கள் மத்தியல் எடுத்துக்கூற தாகத்தை ஏற்படுத்தியருளும். தந்தையால் ஊட்டம் பெறுவதோடு பெறப்படுகின்ற கொடைகளை இறை அரசுக்காக அல்லது இறை விருப்பத்தை நிறைவேற்ற திடப்படுத்தியருளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**06 புதன்**

முதலாம் வெளிப்பாடு

கலாத்தியர்

2: 1-2, 7-14

பதிலுரைப்பாடல்

திருபா 117 : 1-2

நற்செய்தி வெளிப்பாடு

புனித லூக்கா

11: 1-4

புனித புருனோ நினைவு

**பரிசுத்த நற்செய்தி**

இயேசு ஓரிடத்தில் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர்.... தந்தையே உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக. உமது ஆட்சி வருக. எங்கள் அன்றாட உணவை நாள் தோறும் எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதுபோல் எங்கள் பாவங்களையும் மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீயோனிடமிருந்து எங்களை விடுவித்தருளும். என்று கற்பித்தார்.

**ஒளியின் விழிப்புறுதல்**

பரிசுத்த ஆவியானவரே இயேசுக்கிறிஸ்துவின் உள்ளரங்கத்தை நான் புரிந்துகொள்ள உமது வல்லமையுள்ள தூய ஆவியினால் என்னை நிரப்பும். தந்தையே உமது நாமம் தூயதெனப் போற்றப்படுக. உமது ஆட்சி வருவதாக என்று நாம் அன்றாடம் கூறுவோம். இறைவனின் அரசை இவ்வுலகில் செயலாற்றுவதற்குத் தான் 14 ஆண்டுகளுக்கு பின் எருசலேமுக்கு செல்ல வேண்டுமென்று புனித பவுலடிகளார் இறைவன் வெளிப்படுத்தினார். அதன்படி அவர் இறைவனின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து பிற இனத்தாருக்கு நற்செய்தியை அறிவிக்கும் பணியைச் செய்தார். இந்த உலகில் இறைவனின் அரசு செயல்படவேண்டும் என்பதற்காக இறை வார்த்தையின் செயல்பாடுகளை அறிவித்தார். அடுத்து இறை இயேசுவின் வேண்டுதலில் எங்களுக்கு தீமை செய்பவர்களை நாங்கள் மன்னிக்க வேண்டும். அப்பொழுதுதான் எங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். நாம் மற்றவர்களை மன்னித்தால் தான் நாம் மன்னிக்கப்படுவோம். நாம் மற்றவர்களை மன்னிக்கும் மனப்பக்குவம் எம்மிடம் இருக்கின்றதா? என்று எம்மையே நாம் சோதித்துப் பார்ப்போம். அதற்கு தூய ஆவியின் துணையை நாடுவோம். அவர் எங்களுக்கு நாம் யார் என்று உணர்த்துவார். எம் குற்றத்தை புரிய-வைப்பார். அப்படி அவரில் நிரம்பியி-ருக்கிறவேளையில் உடனே இல்லாம் சற்று நேரம் சென்றாவது நானே பாவி நான் மற்றவர்களின் குறையை மன்னிக்கக்கூடாது என்ற தெளிவைத் தருவார். விசேடவிதமாக மறுமலர்ச்சி இயக்கத்தில் இருக்கிறவர்களுக்கு சோதனைகள் ஏற்படுகின்றன. சாத்தானின் சூழ்ச்சிகள் வருகின்றன. இவை அனைத்திலிருந்தும் விடுபட வேண்டும் என்பதற்காகத்தான் நாளந்தம் எனது மணித்தியாலயத்தில் இறைவனிடம் உரையாடி அவரில் தங்கி தாரகை மந்திரமாக பரலோக செபத்தை கூறவேண்டும்.

**எம் பேரில்**

எம் ஒவ்வொரவுரையும் இம்மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலமாக அழைத்த இறைவன் நாம் இறைவனின் அரசிற்காக, இறையரசு இவ்வுலகில் பழுகிபெருகுவதற்காக எந்த அளவு தாகத்தோடு செயல்படுகின்றோம். சிந்திப்போம். கிறிஸ்தவம் கீழ்நோக்கிப் போகும் இக்காலத்தில் எமது குருத்துவத்திற்கு, எமது சங்கத்திற்கு எந்த விதத்தில் பயனுள்ள கருவிகளாக செயல்படுகின்றோம்? எங்களுடைய உள்ளத்தில் இந்த மறுமலர்ச்சி இயக்கம் பெருக வேண்டும். வளர வேண்டும் என்று ஒவ்வொருவருடைய உள்ளத்தில் தாகமும், ஆவலும் இருக்கின்றதா? எங்களையே நாம் கேட்போம். எங்களை அழைத்து தேர்ந்து கொண்ட உரிமையாளரிடம் மன்றாடுவோம்.

**செபம்**

திபா 117:1-2 பிற இனத்தாரே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள் மக்களினத்தாரே நீங்கள் அனைவரும் அவரைப் புகழுங்கள். ஏனெனில், ஆண்டவர் நமக்கு காட்டும் மாறாத அன்பு மிகப்பெரியது. அவரது உண்மை என்றென்றும் நிலைத்துள்ளது. அல்லேலூயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**07 வியாழன்**

முதலாம்வெளிப்பாடு

திருபணி

1: 12-14

பதிலுரைப்பாடல்

லூக் 1: 46 - 55

நற்செய்திவெளிப்பாடு

புனித லூக்கா

1: 26-38

புனித செபமாலை அன்னையின் நினைவு

**நாளின் அறிமுகம்**

பேறுபெற்ற தேவ-தாயாருக்கு நாம் பல பெயர்-களைக் கொண்டு விழா எடுக்கின்றோம். இன்று நாம் அன்னையை செபமாலை அன்னை என அழைத்து விழா கொண்டாடுகின்றோம். செபமாலை என்னும் மலர்க்கொத்தை எனக்கு நீட்டியவண்ணம் கதைக்கும் தயார் இதனை ஒரு ஆயு-தமாகவும், பாவிக்கும் படி-யாக எமக்குக் கூறுகின்றார். மீட்புப்பணியில் முக்கிய இடத்தை வகிக்கும் தயார் எமக்கு தந்துள்ள செபமா-லையை நாம் தியானத்-துடன் ஓதும் பொழுது கிறிஸ்து இயேசுவோடு நாம் இணைகின்றோம். எம் வாழ்வில் நாம் முகம் கொடுத்த வேதனைகள், சோதனைகளில் செபமா-லையைச் சொல்லி அன்னையின் அடைக்கலத்தைப் பெற்ற சந்தர்ப்பங்கள் பல. குடும்பத்தில் ஒன்றுகூடி தினமும் செபமாலையைச் சொல்லும்போது தேவ அன்னையின் அன்பில் நிரம்பி அரவணைப்பில் வாழ்கின்றோம். உம் சித்தம் நிறைவேற்றுவதே என் உணவு என்று வாழும் தாயாரின் நற்குணங்களைப் பெற்று நாமும் இறை சித்தம் நிறைவேற்றத் தாகம் கொள்வோம்

**பரிசுத்த நற்செய்தி**

***லூக் 1:26-38 தயவு செய்து தியானத்துடன் வாசிக்கவும்***

**ஒளியின் விழிப்பு**

தேவதுாதர் வாழ்த்துக்களுடன் நாசரேத்தில் கன்னிப் பெண் மரியா-ளுக்கு கூறும் நற்செய்தியைக் கேட்டு கலக்கமடைகின்றார். *இது எப்படி நடக்கும்...???* திருமணத்திற்கு முன் கருத்தாங்கியிருந்தால்... பல பல சிந்தனைகள் உள்ளரங்கத்தில் எழுந்திருக்கும். வானதூதர் மீண்டும் *மரியா அஞ்ச வேண்டாம். கடவுளின் அருளால் நிறைபெற்றதால், ஓர் மகனைப் பெற்று இயேசு என்று பெயரிடுவீர்* என்று கூறி இறைவல்லமையை உறுதிப்-படுத்தி *உறவினர் எலிசபெத் முதிர்ந்த வயதில் கருத்தாங்கி ஓர் மகனைப் பெறப்போகின்றார். கடவுளால் இயலாதது ஒன்று இல்லை* எனக் கூறுகின்றார். தூய ஆவியின் வல்லமையை பெற்று மரியாள் இறைவனில் முழுநம்பிக்கை வைத்தவளாக *நான் ஆண்டவரின் அடிமை. உம் சித்தம் என்னுள் நிகழட்டும்* என்று இடமளிக்கின்றாள்.

**எம் பேரில்**

ஆண்டவர் மீட்பின் பணிக்கு மரியாளாவைத் தெரிவு செய்த-துபோல் தூதுச்சேவைக்குத் திருமு-ழுக்குப் பெற்ற எம் ஒவ்வொரு-வரையும் தெரிவு செய்துள்ளார். இவ்வழைப்பிற்கு மரியாளைப்போல் ஆமென் கூறி எம்மை முழுமையாக இறைவிருப்பம் நிறைவேற்றுவதற்-காக அர்ப்பணம் செய்ய முடியுமா? அன்று மரியா முகம் கொடுத்த சகல சவால்களுக்கும் துணையாக தூய ஆவியானவர் இருந்தது போல எம்மோடு எம்முள்ளும் இருக்கும் தூய ஆவியானவருக்கு விழிப்பு-றுகின்றோமா? எம் பெலவீனங்களில் செபமாலையின் வல்லமையைக் காண்போம். பேறுபெற்ற தாயா-ரைபபோல் எம்மையே வெறுமை-யாக்கிக் கொண்டு இறை அன்பில் நிறைவுபெற்று வாழ முன்வருவோம்.

**செபம்**

அன்பு தந்தாய் உம் திருமகன் வழியாக பேறுபெற்ற தாயாரை எம் அனைவரிலும் தாயாராகத் தந்துள்ளமைக்காக நன்றி தாயாரின் நற்குணங்களை நாங்கள் பின்பற்றி எம் வாழ்வை இறை விருப்பம் நிறைவேற்றுவதே தரிசனமாகக் கொண்டு வாழ வல்லமைத் தாரும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**08 வெள்ளி**

முதலாம்வெளிப்பாடு
கலாத் 3 : 7-14

பதிலுரைப் பாடல்
திருபா 111 : 1-6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
11: 15 - 26.

**நற்செய்தி**

தனக்கு எதிராக தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப் போகும்......... என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார். என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறடிக்கிறார்.

**முதல் வெளிப்பாடு**

நம்பிக்கை கொண்டு வாழ்பவரே ஆபிரகாமின் மக்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். நம்பக்கை கொள்ளும் பிற இனத்தாரையும் கடவுள் தமக்கு ஏற்புடையவராக்குவார் என்பதைமுன் அறிந்துதான் மறைநூல், உன்வழியாக மக்கள் இனங்கள் அனைத்தும் ஆசி பெறும் என்றும் நற்செய்தியை ஆபிரகாமுக்கு முன் உரைத்தது. ஆகவே நம்பிக்கை கொண்ட ஆபிரகாம் பெற்ற அதே ஆசியில் நம்பிக்கை கொள்வோரும் பங்கு பெறுவர்.... சட்டம் சார்ந்த செயல்களால் எவரும் கடவுள் முன்னிலையில் ஏற்புடையவர் ஆவதில்லை என்பதும் தெளிவு. ஏனெனில் நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வடைவர்....'

**ஒளியின் விழிப்பு**

அக்கினியாம் ஆவியானவரே! எம்மீது இரங்கும் அன்று ஆபிரகாம் ஆண்டவரின் வார்த்தைக்கு செவிசாய்த்து கீழ்படிந்தார். அதை கடவுள் அவருக்கு நீதியாக கருதினார். அதனால் அவர் எமக்கு விசுவாசத்தின் தந்தையானார். ஆபிரகாமுக்கு கிடைத்த ஆசீர் இயேசுகிறிஸ்து வழியாக புற இனத்தாருக்கு கிடைக்கவும் வாக்களிக்கப்பட்டது. இயேசுக்கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு உயிர்விட்டு உயிர்த்தெழுந்து எம்மோடு வாழ்கிறார் என்பதை நம்பிக்கையோடு ஏற்று வாழ்ந்தோமானால் எமக்கும் அந்த ஆசீர் கிடைக்கும் என்பதை புனித பவுல் கூறுகிறார்.

**எம் பேரில்**

இயேசுகிறிஸ்துவுக்குள் வலிமை பெறாவிடில் நாம் தளர்ந்து போய் விடுவோம். அவர் எமக்கு ஆதாரமாக தூய ஆவியை தந்துள்ளார். நாம் அவர் காட்டும் நெறிமுறைகளுக்கு ஏற்ப அவரின் கனிகளாகிய அன்பு மகிழ்ச்சி அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தாழ்மையான குணங்களை கொண்டவர்களாக எந்த நிலை வந்தாலும் பெருமைப்டாமல் பொறாமை, சினம் கொள்ளாமல் ஒருவருக்கு ஒருவர் அன்பு உள்ளவர்களாய் இருந்து ஆவிக்குரிய இயல்புடையவராய் இருப்போம்.

**செபத்திற்குள்ளாகுதல்**

ஆண்டவரே, உமது செயல்கள் மேன்மையும் மாண்பும் மிக்கது. உமது நீதி என்றென்றைக்கும் நிலைத்துள்ளது. உமக்கு அஞ்சி நடப்போருக்கு நீர் உணவு அளிகிறீர். ஆண்டவரே, நீர் அருளும் இரக்கமும் உடையவர். நெஞ்சார ஆண்டவரே நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன் ஆமென்.

**ஆண்டவரின் செயல்கள் உயர்ந்தவை. அவற்றில் இன்பம் காண்போர் அனைவரும் அவற்றை ஆய்ந்துணர்வர்.**

**(தி.பா.111: 2)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**09 சனி**

முதலாம்வெளிப்பாடு
கலாத் 3 : 22 - 29.

பதிலுரைப்பாடல்
திருபா 105 : 2-7.

நற்செய்தி
வெளிப்பாடு
புனித லூக்கா
11: 27 - 28

ஆயர்
தியனொசியு,
புனித யோவான்
லெயோனார்ட்
நினைவு

**பரிசுத்த நற்செய்தி**

அவர் இவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தபோது கூட்டத்திலிருந்து பெண் ஒருவர், உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர் என்று குரலெழுப்பிக் கூறினார். அவரோ, இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர் என்றார்.

**ஒளியின் விழிப்பு**

எமது துணையாளராம் தூய ஆவியானவரே, அக்கினியாய் எம்மேல் இறங்கி வந்து இயேசுநாதரின் உள்ளரங்க அனுபவத்தினைக் காண எம்மை முழுமையாக வழிநடத்தும்.

*இறை வார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்.* இயேசு ஆண்டவரின் உள்ளரங்கத்தில் இருந்து வெளியாகிய இவ்வார்த்தைகள் முன் ஒரு கணம் தோன்றி நிற்போம். தூய ஆவியானவரின் வழிநடத்தலுக்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்த இறைமகன் அப்பா தந்தை சொல்லுவதை செய்யும் மகனாகவும், செய்வதையே செய்யும் மகனாகவும் செயறப்பட்டார். இறைவார்த்தையை நூற்றுக்கு நூறு கடைப்பிடித்து அதை நிறைவேற்றி *உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை* என எடுத்துக் கூறும் அளவிற்கு இறை அன்பில் மூழ்கியி-ருந்து செயற்பட்டார். நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என இறைவார்த்தைக்கு அடிபணிந்து இறை விருப்பத்தினை நிறைவேற்றிய பேறுபெற்ற தமது தாயாரின் செயற்பாடுகளைக் கண்டு பூரிப்படைந்திருப்பார். தமது தாயாரிடமிருந்து கற்றுக்கொண்ட அனைத்தும் இறைவிருப்பத்தினை நிறைவேற்றிட அவருக்கு ஒரு படிப்பினையாக இருந்ததைக் காண்கின்றார். தம்மைப் பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து பாலூட்டி வளர்த்ததினால் மட்டுமல்ல, தாயார் இறைவார்த்தைக்கு அடிபணிந்து அதைக் கடைப்பிடித்து இறைவிருப்பத்தை நிறைவேற்றிய ஒருவர் பேறுபெற்ற தாயார் என்பதைக் காணும் அவர் இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர் என அங்கு கூடி இருந்தோரைப் பார்த்து எடுத்துக் கூற முன்வந்தார். இன்று எம்மையும் பார்த்து இறைவார்த்தைகளைக் கடைப்பிடித்து இறைவிருப்பத்தினை நிறைவேற்றி இறைஅரசின் மகனாக மகளாக வாழ அழைப்புவிடுகின்றார்.

**எமது பக்கம்**

இறை அரசிற்காக தேர்ந்து எடுக்கப்பட்ட நாம் எவ்வளவு தூரம் தூய ஆவியானவருக்கு விழிப்புறுகின்றோம். *உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை* என எடுத்து கூற எம்மால் முடியுமா? நான், எனக்கு என்னுடையது என்பவற்றிற்கு அடிமையாகி இறை விருப்பத்தை நிறைவேற்ற முடியாத நிலையிலா இருக்கின்றோம்? எமது பெலவீனங்களுக்கு விழிப்புறுவோம். உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை என எடுத்துக்கூறிச் செயல்படுவதற்கு எமக்குத் தடையாக இருப்பவற்றிற்கு விழிப்புறுவோம். எம்மை வழிநடத்த தூய ஆவியானவருக்கு இடமளிப்போம். இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடித்து இறை விருப்பத்தை நிறைவேற்றும் மக்களாக வாழத் தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.

**செபத்திற் குள்ளாகுதல்**

அன்பின் ஆண்டவரே! நீர் வெளிப்படுத்துகின்ற வார்த்தைக்கு கணத்திற்கு கணம் விழிப்புற்று அதை நிறைவேற்றி உமது அரசின் மக்களாக வாழ உமது தூய ஆவியினால் எம்மை அபிஷேகம் செய்தருளும், ஆமென்.

அவர்தம் அருஞ்செயல்களையும்,
அவரது வாய் மொழிந்த நீதித்
தீர்ப்புகளையும் நினைவில்
கொள்ளுங்கள்

(தி.பா. 105:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**10 ஞாயிறு**

முதலாம்வெளிப்பாடு
2 அரசர்
5 : 14 - 17

பதிலுரைப்பாடல்
திபா 98 : 1 - 4

2 தீமோ
2: 8 - 13

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்
17: 11 - 19

இன்று
பொதுக்காலத்தின்
28வது ஞாயிறு

ஆண்டவரது கனிவிரக்கத்தை அதாவது தம்மை நம்பி, தம்மிடம் வருவேரைக் கைவிடாது அவர்கள் பேரில் ஆண்டவர் காண்பிக்கும் இன்றைய வெளிப்பாடுகள் முன்வைக்கின்றன. சிரியா மன்னனின் படைத்தலைவனாகிய தொழுநோய் துன்புற்ற நாமான் இறைவனுடைய ஊழியனது வார்த்தைக்குப் பணிந்து அவர் சொற்படி நடந்ததால், நோயினின்று குணத்தைப் பெறுவதோடு, இஸ்ரவேலின் ஆண்டவரை மெய்யங்கடவுளாக ஏற்றுக் கொள்வதை முதலாவது வெளிபாட்டில் காண்பதற்கு முடியுமாகிறது. பத்து தொழுநோயாளர்கள் இயேசு ஆண்டவரால் குணமாக்கப்பட்டபோதிலும், பிற இனத்தவரான (சமாரியா) ஒருவர் மாத்திரம் திரும்பிவந்து கடவுளைப்புகழ்வதை நற்செய்தி வெளிப்பாடாகின்றது. மனித வாழ்க்கையின் ஒரே தலைப்பு *உயிர்த்தெழுந்த இயேசு ஆண்டவரே* அவருக்கு பிரமாணிக்கமுள்ளவர்களாக வாழ வேண்டுமென பவுலடிகளார் இரண்டாவது வெளிப்பாட்டின் வழியாக எடுத்தியம்புகின்றார்.

**முதலாவது வெளிப்பாட்டிலிருந்து..**

...நாமான் புறப்பட்டுச் சென்று கடவுளின் அடியவரது வாக்கிற்கிணங்க யோர்தானில் ஏழுமுறை மூழ்கியெழ, அவர் நலமடைந்தார். அவரது உடல் சிறு பிள்ளையின் உடலைப் போல மாறினது. பின்பு அவர் தம் பரிவாரத்துடன் கடவுளின் அடியவரிடம் திரும்பி வந்து *'இஸ்ராயேலைத் கடவுளைத் தவிர வேறு எந்த நாட்டிலும் கடவுள் இல்லையென'* இப்போது *உறுதியாக அறிந்து-கொண்டேன். இதோ உம் அடியான். எனது அன்பளிப்பை ஏற்றுக்கொள்ளும்."* என்றார்.

**பரிசுத்த நற்செய்திபிலிருந்து**

...இயேசு ஒரு ஊருக்குள் வந்த பொழுது பத்து தொழுநோயாளர்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்து தூரத்தில் நின்று கொண்டே *ஐயா! இயேசுவே எங்களுக்கு இரங்கும்* என்று உரக்கக் குருலெழுப்பி வேண்டினார்கள். அவர்கள் அவர்களைப் பார்த்து *நீங்கள் போய் உங்களைக் குருக்களிடம் காண்பியுங்கள்;* என்றார்.... அவர்களுள் ஒருவர் தம்பிணி தீர்ந்திருப்பதைக் கண்டு உரத்த குரலில் கடவுளைப் போற்றிப்புகழந்து கொண்டே இயேசுவிடம் திரும்பி வந்தார்... *பின்பு அவரிடம் எழுந்து செல்லும். உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது* என்றார்.

**ஒளியின் விழிப்புறுதல்**

தாங்கள் மாத்திரமே தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களாவோம் என்ற கருத்தில் ஊன்றித் திளைத்திருந்த இஸ்ரயேல் மக்களுக்கு அகிலத்தின் அரசராம் மகா உன்னதரது மீட்புத் திட்டம் தெரிந்திருக்கவில்லைபோலும், பழைய உடன்பாட்டுக்காலத்திலும், பிற இனத்தார்பேரில் இறைவன் காண்பித்த இரக்கத்தின் செயல்களை பல சந்தர்ப்பங்களில் சந்தித்த போதிலும், அத்தகைய சந்தர்ப்பங்கள் ஊடாக இறைத்திருவுளத்தின் பேரில் அவர்கள் உளந்திருக்கவில்லை. படைத்தலைவனது சிறிய இனத்தினான நாமான் குணமாக்கப்படுதலானது, கடவுளது கனிவிரக்கத்தின் மாபெரும் வெளிப்பாடொன்றாகும். கடவுள் தம்மைப் பல்வேறு விதங்களில் வெளிப்பாடாக்குகின்றார் என்பதற்கான சான்றாகும். இது கடவுளது அன்பினது அகிலத்திற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடாகுவதற்காக வேண்டியே இஸ்ரயேல் மக்கள் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களேயொழிய இதனை தமக்கென்று மாத்-திரம் வைத்துக்கொள்வதற்காக வேண்டியல்ல. ஆயினும், கடவுளது திருவுளத்தின்படி அது நடந்தேறவில்லை.

அதனால் தான் கடவுள் தமது திருவுளத்தை நிறைவேற்றுவதற்காக வேண்டி தமது ஒரேபேறான மகனை இவ்வுலகிற்கு அனுப்பி வைக்கிறார். அன்றைய வழக்கத்தின்படி தொழுநோயாளர் குணமாகிய பின் அவர்கள் குணமாகிவிட்டனர் என்பதனை குருக்கள் உறுதிப்படுத்தவேண்டும். பரிசுத்த நற்செய்தியில் வெளிப்படுத்தப்படும் பத்து தொழுநோயாளரும் குருக்களிடம் போகும் வழியில் தான் குணமடைந்தனர். சட்டத்திட்டங்களையும், நியமங்களையும் நிறைவேற்றுவதையே குணமடைந்த இஸ்ரயேல் இனத்தவரான ஒன்பது தொழுநோயாளரும் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றத. ஆயினும், சமாரிய இனத்தவன் மீளத் திரும்பிவந்து இயேசு ஆண்டவரோடு கடவுளைப்போற்றிப் புகழ்கின்றான். சட்ட திட்டங்கள் அவனுக்கு முக்கியமானதாக இருக்கவில்லை. *எழுந்து செல்லும் உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது* உள்ளத்திலிருந்து எழுகின்ற அத்தகைய புகழ்ச்சியானது கடவுளை மகிமைப்படுத்துவதாகிறது.

**எம்பேரில்**

எமது வாழ்க்கையிலும் அத்தகைய சந்தர்ப்பங்களை சந்திக்கின்றோமா? கடவுளுக்கு அளிக்க வேண்டிய மகிமையை வேறு எதற்கேனும், எவருக்கேனும் அளித்திருக்கின்றோமா? ஆவியானவரே எமக்குக் காண்பித்தருளும். மனம் வருந்துகின்றோம்.

**இரண்டாம் வெளிப்பாட்டிலிருந்து**

தாவீதின் மரபில் வந்த இயேசுக்கிறிஸ்து இறந்து. உயிப்பெற்று எழுந்தார் என்பதே என் நற்செய்தி. இதனை நினைவிற்கொள். இந்நற்செய்திக்காகவே நான் குற்றம் செய்தவனைப்பேல் சிறையிடப்பட்டுத் துன்புறுகின்றேன். ஆனால், கடவுளின் வார்த்தையைச் சிறைபடுத்த முடியாது.... நாம் அவரோடு இறந்தால் அவரோடு வாழ்வோம். அவரோடு நிலைத்திருந்தால் அவரோடு ஆட்சி செய்வோம்... நாம் நம்பத் தகாதவரெனினும், அவர் நம்பத்தகுந்தவர். ஏனெனில், தம்மையே மறுதலித்த அவரால் இயலாது....

**ஒளியின் விழிப்புறுதல்**

உலக செல்வம், செல்வாக்கு, அதிகாரம், வல்லமை என்பவற்றை அணிகளாகப்பூண்டுகொண்டு வாழ்ந்த சவுல் உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்தன்பின்னர் பவுலடிகளாக வாழ்ந்தபொழுது அனைத்துமே உயிர்த்தெழுந்த இயேசுவானார்.

உயிர்த்த ஆண்டவரையே எமது வாழ்வின் ஆண்டவராக்கிக் கொண்ட நாம் அவரை மறந்து வாழ்-ந்தவாறு நாம் பாவம் செய்யவில்லை என்போமானால், நம்மிடம் அவரைப் பொய்யராக்குகின்றோம். அதாவது அவரது வார்த்தை எம்மிடம் இல்லை என்பதேயாகும். எனவே கனிவிரக்கம் மிகுந்த தந்தையிடம் திரும்பிச் செல்வோம். எமது உண்மையான நிலையை அவரிடம் அறிக்கையிடுவோம். அப்போது அவர் எம்மைப்பார்த்து *எழுந்து செல்லும், உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது* என்பார்.

**வாரம் பூராகவும்**

- ஒப்புரவின் திருவருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்வோம்.
- கூடுமானளவு வாரநாட்களில் திருப்பலியில் பங்கு கொண்டு உயிருள்ள இறைவனைப் பெற்றுக்கொள்வோம்.
- சந்தர்ப்பம் கிட்டும் பட்சத்தில் நற்கருணைநாதரைச் சந்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**11 திங்கள்**

முதலாம்வெளிப்பாடு
கலாத் 4 : 22- 24,
26 - 27, 31-5 :1.

பதிலுரைப்பாடல்
திருபா 113 : 1 -7

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
11: 29-32

**பரி. நற்செய்தி**

மக்கள் வந்து கூடக்கூட இயேசு கூறியது இந்தத் தீய தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. யோனா நினிவே மக்களுக்கு அடையாளமாய் இருந்ததைப் போன்று மானிடமகனும் இந்தத் தலைமுறையினருக்கு அடையாளமாய் இருப்பர். தீர்ப்பு நாளில் தென்னாட்டு அரசி இத்தலை முறையின- ரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெ- னில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக்கோடியில் இருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா! தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களை கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள். ஆனால் இங்கிருப்பவர் யோனாவை விடப்பெரியவர் அல்லவா!,

**ஒளியில் விழிப்புறுதல்**

ஆவியானவருக்கு இடமளித்தவாறு நற்செய்தியை வாசித்தபோது இயேசுநாதரின் உள்ளத்தில் எழுந்த வேதனையின் பிரதிபலிப்பை உணர முடியுமாக இருந்தது. அடையாளங்களும், அருங்குறிகளும், புதுமைகளும் மாத்திரமே அம்மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. தமது வாழ்வு பிறருக்கு ஒளியாக வேண்டும் எனும் குறிக்கோளை இழந்தவர்கள், தமக்கு மாத்திரம் எல்லாம் நன்மையாக வேண்டும் எனும் நோக்கில் வாழ்ந்தார்கள். தம்முள் இருக்கும் தன்னலம் நிறைந்த பாவங்களில் நின்று, மனந்திரும்ப விரும்பாதவர்களின் மனதினை அறிந்து கொள்ளும் ஆற்றலை கொடுக்கும் வார்த்தையால் இறைவாக்கினர் கெல்லாம் இறைவாக்கினரான இறைமனக் உரையாடுகின்றார்.

**எம்பேரில்**

நாம் புதுமைகளை, வரப்பிரசாதங்களை மாத்திரம் எதிர்பார்த்து வாழும் மக்கள் கூட்டத்தினரா? ஆண்டவரின் திருத்திட்டத்திற்கு ஏற்ப நாம் ஏதேனும் வேண்டுதல் செய்திருப்பின் அவை கிடைக்காவிடில் அதைப் பெற்று கொள்ளும்வரை அடம்பிடிப்பவர்களாக வாழ்கின்றோமா? அன்றேல் உம் திருச்சித்தத்தின்படி எனக்காகட்டும் என்று இடமளித்து மகிழ்ச்சியோடு வாழ்கின்றோமா? மற்றவர்களின் நிலைமைகள், பிரச்சினைகளுக்காக இறைவன் முன்தோன்றியிருந்து அவர்களுக்காக இறைதந்தையிடம் மன்றாடுகிறோமா? ஒரு கணம் கிறிஸ்து ஆண்டவரை நோக்குவோம். அனைத்திலும் இறை திட்டத்திற்கு அடிபணிந்த ஆண்டவரை நமஸ்கரிப்போம்.

**செபம்**

படைப்பாளராம் தூய ஆவியானவரே! கணத்திற்கு கணம் இறை தந்தையை மகிமைப்படுத்தும் வாழ்க்கைக்கு எம்மை வழிநடத்திச் சென்றருளும். சாலமோனிலும் யோனாவிலும் பெரியவர் உயிர்த்த ஆண்டவராக எம்முன் இருக்கிறார். அவரின் முகத்தை நோக்கியவாறு எமது வாழ்வின் அனைத்து கணங்களிலும் முன்நோக்கிச் செல்வோம் ஆமென்.

மக்களினங்கள் அனைத்திற்கும்
ஆண்டவர் மேலானர்:
வானங்களையும்விட உயர்ந்தது
அவரது மாட்சி நம் கடவுளாகிய
ஆண்டவருக்கு நிகர் யார்?
அவர்போல வானளாவிய உயரத்தில்
வீற்றிருப்பவர் யார்?

(திபா.113 : 4 - 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010

ஐப்பசி

12 திங்கள்

முதலாம்வெளிப்பாடு
கலாத் 5 : 1- 6.

பதிலுரைப்பாடல்
திருபா 119 : 41
43 - 45, 47 - 48

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
11: 37-41

**பரி. நற்செய்தி**

இயேசு பேசிக் கொண்டிருந்தபோது பரி-சேயர் ஒருவர் தம்மோடு உணவு அருந்தும்படி அவ-ரைக் கேட்டுக்கொண்டார். அவரும் போய்ப் பந்தியில் அமர்ந்தார். உணவு அருந்-துமுன்பு அவர் கை கழுவா-ததைக் கண்டு பரிசேயர் வியப்படைந்தார். ஆண்-டவர் அவரை நோக்கிக் கூறியது பரிசேயரே, நீங்கள் கிண்ணத்தையும் தட்டையும் வெளிபுறத்தில் தூய்மையாக் குகிறீர்கள். ஆனால் உங்களுக்கு உள்ளே கொள்ளையும் தீமையும் நிறைந்திருக்-கின்றன. அறிவிலிகளே, வெளிப்புறத்தை உண்டாக்-கியவரே உட்புறத்தையும் உண்டாக்கினார். அல்லவா! உட்புறத்தில் உள்ளவற்றைத் தர்மமாக்க கொடுங்கள். அப்பொழுது உங்களுக்கு அனைத்தும் தூய்மையாயிருக்ககும்.

**ஒளியில் விழிப்புறுதல்**

எங்கள் இயேசு ஆண்டவரின் உள்-ளம் இறைதந்தையின் அன்பில் பூரணமாக எந்நேரமும் நிறைந்து ஆண்டவர் செயல் படும். சட்டம் அன்பிற்கு விழிப்புறாமல் உலக மட்டத்திலானா சட்டதிட்டங்களும் சம்பிரதா-யங்களுக்கு முதலிடம் கொடுத்து செயலாற்-றும் பரிசேயர் உட்பட அவர்களின் தலை-மைத்துவம் வகிக்கும் அனைவரின் உள்ளங்-களையும் ஊடுருவிக்காணுகின்றார். அவர்-களின் உள்ளம் வெளிவேஷம் மட்டுமே. உள்ளேகொள்ளையும் தீமையும் நிறைந்-திருக்கின்றன என்பதைக் காணுகின்றார். காணுவது மட்டுமல்ல, பரிசேயரின் உள்ளத்-தில் இருக்கும் உண்மையான நிலையை எடுத்துக் காட்டுகின்றார். வெளிப்புற தூய்மை-யைவிட, உங்கள் உள்ளத்தில் இருந்து வரும் தூய்மையை உத்தமமானது என்று வெளிப்படுத்துகின்றார்.

**எம்பேரில்**

நாங்கள் வாழும் இன்றைய சமுதாயத்திலே கிறிஸ்தவம் அல்-லாத, பெயரளவில், கிறிஸ்தவர்-களாக வெவ்வேறு பக்தி அப்பியா-சங்கள், வெறும் சம்பிரதாயங்கள் இவைகளுக்குக் கட்டுப்பட்டு நாங்கள் தான் நல்லகத்தோலிக்கர் என்று எண்ணி திருப்திப்படும் மக்களா? அல்லது போனால் இறை அரசின் மக்களாக உமது விருப்பத்-தைத் தவிர வேறு எதுவும் எனக்கி-ல்லை என்ற இவ்வருட தலைப்பு வேறும் வார்த்தைகளாக மட்டும் காணாமல், எங்கள் வாழ்க்கையின் வழியாக அவரது சாட்சிகளாக வாழ்ந்து இன்னமும் இறை அன்பி-னை அறியாத மக்களுக்கு அவரது அன்பினை அளிக்கும் மக்களாக எம்மை வழிநடத்துமாறு இறை-வனை நோக்கி மன்றாடுவோம்.

**செபம்**

அன்பின் இறைவா! என்னு-டைய உள்ளம் உள்ளாந்திர்தில் இருக்கும தூய்மையற்ற நிலையை காட்டித்தாரும். தூய ஆவியானவரே, நான் போட்டிருக்கும் முகமூடியை என்னைவிட்டு அகற்றியருளும். எந்-நேரமும் உமக்குகந்த உண்மை-யுள்ள கிறிஸ்தவ மகளாக வாழ்ந்து எந்நேரமும் உம்முடைய வழிநடத்த லுக்கு என்னை உள்ளாக்கி விழிப்பற்று சாட்சி அளிக்க வரம் தாரும் ஐயா!

உமது திருச்சட்டத்தை நான்
எப்போதும் கடைப்பிடிப்பேன்;
என்றென்றும் எக்காலமும் அதைப்
பின்பற்றுவேன். உம் ஒழுங்கு
முறைகளைப்பற்றி நான் அரசர்
முன்னிலையிலும் பேசுவேன். உம்
நியமங்களை நான் நாடியுள்ளதால்
பரந்த பாதையில் தடையின்றி நான்
நடப்னே

(தி. பா. 119 : 44 - 45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**13 புதன்**

முதலாம்
வெளிப்பாடு
கலாத் 5 : 18-25

பதிலுரைப்பாடல்
திரு.பா
1 : 1-4, 6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
11: 42-46

**முதலாம் வெளிப்பாடு**

நீங்கள் தூய ஆவியால் வழிநடத்தப்பட்டால் திருச்சட்டத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்கமாட்டார்கள்..... இறையாட்சியை உரிமைபேறாக அடைவதில்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அதையே இப்போதும் மீண்டும் சொல்கிறேன். ஆனால் தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்சி..... எனவே அந்த ஆவி காட்டும் நெறியிலே நடக்க முயலவோம்.

**முதல்வாசகவிளிப்புறுதல்**

அன்பின் தூய ஆவியானவரே, இறைவனின் உள்ளாந்தரத்தை அறிய புனித பவுலுக்கு உதவியது போல் எமக்கும் உதவியருளும். கலாத்தியருக்கு பவுல் எழுதிய மடலின் பகுதியின் மூலமாக ஒரு மாபெரும் உண்மையை வெளிப்படுத்துகிறார். திருச்சட்டம் தான் இறைவன் என்று வாழ்ந்த கலாத்தியருக்கு இறைசட்டத்தை வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவே அவ்இறை சட்டம். அவர் நமக்காக கல்வாரியில் எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டார். அதனோடு எமது ஊனியல்பும் சிலுவையில் அறையப்-பட்டிருப்பதையும் விளக்குகிறார். உலகத்தோடு வாழும் மக்களுக்கு இறையாட்சியை உரிமைப்பேராகப் பெறமாட்டார்கள் என்பதை தெளிவுபடுத்துகிறார். அவர்கள் வாழ்வில் இருக்கும் தீயவற்றை தீய செயல்களை பட்டியலிட்டுக் காட்டுகின்றார். ஆனால் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தவர்களின் செயல்களையும் பட்டியலிடுகிறார். தூய ஆவியின் வழிநடத்துதலும் இவர்களுக்கே கிடைக்கின்றது. உலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்தைச் சாராத மக்களுக்கே இப்பாக்கியம் என்று தெட்டத்தெளிவாக அன்று கலாத்தியருக்கு புனித பவுல் எழுத்தியது இன்று எமக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

**எம்பேரில்**

இன்றைய முதல்வாசகத்தில் வெளிப்படுத்தப்படும் இம்மாபெரும் சத்தியம் எமக்கு ஒரு சவாலாக இல்லையா? எமது உள்ளாந்தரத்தை சற்றுக் கண்களை மூடிய வண்ணம் ஆராய்வோம்!!! நாம் எங்கிருக்கின்றோம், உலகத்தோடு சேர்ந்த வாழ்வா? அல்லது கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றோமா? நாம் உலகத்தோடு வாழ்பவர்களாயிருந்தால் புனித பவுல் பட்டியலிட்டிருப்பதிற்கு நாம் அடிமைப்பட்டிருப்போம். ஆனால் கிறிஸ்துவுக்குள் வாழும்போது தூய ஆவியானவரின் துணையுடன் எமது வாழ்வில் அந்த நற்கனிகள் மூலம் நானும், என் குடும்பம், என் சங்கம், ஊர், உலகமுமே நன்மைபெறும். நாம் உலகத்தோடு வாழும்பொழுது உள்ள பட்டியலில் ஒன்றுக்கு அடிமைப்பட்டிருந்தாலும் இறையாட்சிக்கு உள்ளாகமாட்டோம். கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால்தான் இறையாட்சிக்கு உரிமையாளராவோம். நாம் கிறிஸ்துவுக்குள் வாழாமல் இருந்தால் இன்றே ஒருமாற்றத்தை ஏற்படுத்த தூய ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொள்வோம்.

**செபம்**

அன்பின் ஆண்டவரே, இறையாட்சிக்கு உட்பட்ட மகனாக, மகளாக வாழ எம்மில் தடையாக இருப்பவற்றை எமக்கு வெளிகாட்டி அதிலிருந்து விடுதலையாகவேண்டிய வல்லமையை தூய ஆவியின் மூலம் எமக்குப் பொழிந்தருளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**14 வியாழன்**

முதலாம்வெளிப்பாடு
எபே 1 : 1 - 10.

பதிலுரைப்பாடல்
திருபா
98 : 1- 6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
11: 47 - 54

மறை சாட்சியான
திருத்தந்தை
முதலாம் கலிஸ்டஸ்
நினைவு

**பரிசுத்த நற்செய்தி**

ஐயோ உங்களுக்கு கேடு. ஏனெனில் நீங்கள் இறைவாக்கினருக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்புகின்றீர்கள்.....உலகம் தோன்றியதிலிருந்து சிந்தப்பட்ட இறைவாக்கினர் அனைவரின் இரத்தத்திற்காக இந்தத் தலை முறையினரிடம் கணக்குக் கேட்கப்படும். ஐயோ திருச்சட்ட அறிஞரே. உங்களுக்குக் கேடு. ஏனெனில் இந்த அறிவுக் களஞ்சியத்தின் திறவுகோலை நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள். நீங்களும் நுழைவதில்லை நுழைவோரையும் தடுக்கின்றீர்கள். என்றார்.

**ஒளியின் விழிப்பு**

ஞானத்தின் ஒளியாகும் தூய ஆவியானவர் திரு மகனாம் இயேசு ஆண்டவரை வழிநடத்திய விதத்தை காண்பதற்கான ஒளியை வேண்டி செபிப்போம்.

திருச்சட்டத்தை வெளிப்படுத்த தெரிவு செய்யப்பட்ட மறைநூல் அறிஞர்களின் வெளிவேடத் தன்மையை காணும் திரு மகனானவர் உண்மையைக் காணாமல் வாழ்வோரின் சாபமிகு நிலையை வெளிப்படுத்துவது அன்பின் காரணத்தினாலேயே என்பதை அறிய ஆவியானவர் துணை புரிந்தார். இறைவாக் கினர்கெல்லாம் இறைவாக்கினராகிய இறைமகனாகிய தமக்கு நிகழப் போகின்ற மரணத்திற்கும் இவர்கள் உடன்பட்டு தந்தையின் சாபத்திற்கு உள்ளாகப்போகின்றார்களே எனும் மனகுமுறல் திருமகனானவரின் வார்த்தைவழியாக வெளியா கின்றது. 'மனந்திரும்பிவா' என்னும் அழைப்பை மறைநூல் அறிஞர்களுக்கு விளங்குகின்றார். அறிவுக் களஞ்சியத்தின் திறவுகோலை உண்மைக்கு ஏற்ப வாழ திறந்துவிடு எனும் அழைப்பையும் மறைநூல் அறிஞர்களுக்கு கொடுத்தார். அவர்களோ, சாபக்கேடு மிகு வாழ்வை தமது கடின மனதால் உரிமையாக்கினர். அறிவுக் களஞ்சியத்தின் திறவுகோலும் பறிபோயின.

**எம்பேரில்**

*உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை* எனும் வார்த்தையின் முன்னிலையில் தோன்றி நின்றேன். நாம் யாரோ? எம் விருப்புக்களில் இறைவிருப்பம் நிறைவேறுகின்றதா? அறிவுக் களஞ்சியத்தின் திறவு கோலை உரிய முறையில் திறந்து மகா அன்பானவரை நெருங்குகின்றேனா? என்பதைக் காண பங்கில் முகங்கொடுத்த சிறு அனுபவத்தை தியானித்தேன்.

பங்குகளில் குருமார்களின் மாற்றங்கள் நிகழ்ந்த காலமது. இதுவரை பங்கில் இருந்த குருவானவர், நன்மையான காரியங்களை செய்து மக்களால் நன்மதிப்பைப் பெற்றார். புதிதாக பங்கேற்ற குருவானவரின் செயற்திட்டம் தமது ஒத்தாசைக்கு ஏற்ப அமையாத காரணத்தினால், அவரைப் பங்கில் நின்று விலக்குவதற்காக, உலக மட்டத்தில் படிப்பறிவு பெற்ற ஒருவர் மற்றவர்களையும் தூண்டியவாறு செயல்பட ஆரம்பித்தார். இவைாக்கினராக அபிசேகம் பெற்ற குருவானவருக்கு எதிராக எழுந்து நாம் சாபத்தினை அனுபவிக்க வேண்டும்?

**செபம்**

நல் வழிகாட்டியான ஆண்டவரே! நான் நல்வழியில் நடந்து மற்றவர்களை நல்வழிப்படுத்த உதவியருளும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**15 வெள்ளி**

முதலாம்வெளிப்பாடு
எபேசி 1 : 11-14

பதிலுரைப்பாடல்
திருபா 33 : 1-2, 4-5, 12-13.

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா 12: 1-7

புனித அவிலா தெரேசா நினைவு

**பரிசுத்த நற்செய்தி**

ஒருவரையொருவர் மிதிக்கும் அளவுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தபோது இயேசு முதலில் தம் சீடரோடு பேசத் தொடங்கினார். அவர் அவர்களிடம் கூறியது....... வெளிப்படாதவாறு மூடப்படாதது ஒன்றும் இல்லை. அறியப்படாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றும் இல்லை....... உங்கள் தலைமுடி எல்லாம்கூட எண்ணப்பட்டிருக்கின்றன. அஞ்சாதீர்கள். சிட்டுக்குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)

**ஒளியில் விழிப்புறல்**

பரிசேயர் சதுசேயர் வெளிவேடங்-களை எடுத்துரைத்ததால் கிறிஸ்துவின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்க முயன்றனர். தமது உயிரைவிட தந்தையின் சித்தமே அவருக்கு பெரிதாக இருந்ததால் பயப்படவில்லை. அவரது வாழ்வில் அன்றாடத் தேவைக்கு தந்தையிலே தங்கி வாழ்ந்தார். *நரிகளுக்கு வளைகளும் பறவைகளுக்கு கூடுகளுமுண்டு மனுமக-னுக்கு தலைசாய்க்க இடமில்லை* என்பதன் மூலமும் சீடருக்கு செபிக்க கற்றுகொடுக்-கும்போது *எங்கள் அனுதின உணவை எங்களுக்கு தந்தருளும்* என்பதன் மூலமும் இறைவனில் தங்கி வாழ்வதை சீடருக்கும் பயிற்றுவிக்கின்றார். நான் எதில் தங்கி வாழ்கின்றேன் என்று சிந்திக்க இறைவன் எம்மை அழைக்கின்றார்.

**எம்பேரில்**

கல்வி, பல எதிர்கால ஆசைகள், கற்பனைகள், உலகமட்ட குறிக்கோள் இவைகளிலே தங்கி வாழ்ந்த என்னை இறைவன் அழைத்தார். நான் எதிர்பார்த்த எதுவுமே என் வாழ்வில் நிகழ-வில்லை. எனது நேர்மையான ஆசைகள் கூட நிராசையாகியது. மிக வேதனைப்பட்ட வேளையில் இறைவன் என்னை தூக்கி எடுத்து தமது வாழ்வை எனக்கு விளங்கப்படுத்தினார். அர்ப்பண உரையில் 5 வது உரை. கணத்திற்குக் கணம் வாழ்தல் இம்முறையில் வாழ பழகினேன். அன்றாட வருவாயை எதிர்பார்த்து வாழும் வாழ்வே என்னுடையது. எனக்கு ஒரே ஒரு மகளுண்டு. அவளது கல்வித் தேவைகளை முன்னிட்டு கலக்கம் ஏற்படு-வதுண்டு. இன்றைய வாசகங்களை நினைக்கும்போது கலக்கம் நீங்கி விடுவதுண்டு. அவளுக்கு இசையில் நாட்டமுண்டு. ஓர்கேன் கற்க அவளுக்கு ஆசை. அவள் அதை பழகினால் எம் செபக் குழுவுக்கும் உதவியாயிருக்கும் என்று ஆசை எனக்கும் ஏற்பட்டது. இதற்காக நாங்கள் எதுவும் முயற்சி செய்யவும் இல்லை. யாரிடமும் சொல்லவும் இல்லை. ஆனால் எனது தங்கை வெளிநாட்டிலிருந்து வரும்போது ஒரு ஓர்கோனை அவளது பிறந்தநாள் பரிசாக கொடுத்தாள். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா? இன்று வரை பழக-வில்லை. அவளை பயிற்றுவிக்கும் வசதி தற்போதில்லை. உரிய நேரத்தில் அவளை இறைவன் பயிற்றுவிப்பார் என்ற நம்பிக்கை-யுண்டு. நான் இறைவனிலே தான் தங்கிவாழ்கின்றேன். எனக்குரியதை எனக்கு தந்து என்னை போஷிக்-கின்றார்.

**செபம்**

என் அன்பு தந்தையே இறைவா! உம்மில் நான் இணைந்து வாழ்வதைவிட மேலா-ன வாழ்வு ஒன்றில்லை. எந்நிலை-யிலும் உம்மைவிட்டு விலகாது, உம்மோடு உம் சித்தத்துக்கேற்ப வாழ உமது வல்லமையைத் தாரும் ஆமென்.

யாழிசைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்

(திபா. 33 : 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**16 சனி**

முதலாம்வெளிப்பாடு
எபே 1 : 15 - 23

பதிலுரைப்பாடல்
திருபா 8 : 1- 6.

நற்செய்தி
வெளிப்பாடு

புனித லூக்கா
12 : 8 - 12

புனித எட்விஜ்,
மார்கரீத மரியா
அலகோக்
நினைவு

**பரிசுத்த நற்செய்தி**

நான் உங்களுக்குச் சொல்கிறேன் மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக்கொள்பவரை, மானிட மகனும் கடவுளின் தூதர் முன்னிலையில் ஏற்றுக் கொள்வார். மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் கடவுளின் தூதர் முன்னிலையிலும் மறுதலிக்கப்படுவார்...தொழுகைக் கூடங்களுக்கும் ஆட்சியாளர் அதிகாரிகள் முன்னும் உங்களைக் கூட்டிக்கொண்டு போகும் போது... நீங்கள் பேச வேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்குக் கற்றுத்தருவார்

**ஒளியில் விழிப்புறுதல்.**

அன்பின் ஆவியானவரே! நீர் இன்றி எம்மால் எதுவுமே செய்ய முடியாது. வல்லவரே, நல்லவரே, எங்கள் அன்பு இயேசுவின் உள்ளரங்கத்தை அந்நற்செய்தியில் அறியும் வரத்தினை எனக்குத் தந்தருளும். மக்கள் முன்னிலையில் அன்பின் இயேசுவை ஏற்றுக்கொள்பவரை அன்பின் ஆண்டவர் கடவுளின் தூதர் முன்னிலையில், அதாவது எமது மறுவாழ்வாகிய நிலைவாழ்வின் தீர்ப்பு நாளில் எம்மை ஏற்றுக்கொள்வர் என்று கூறுகிறார். ஏனெனில் ஆண்டவரை விசுவசிப்பவர்களால் தான் அனைவர் முன்னிலையிலும் அவரை ஏற்றுக்கொள்ள அறிக்கையிட முடியும். மேலும் எம்மீது ஆண்டவர் கொண்ட அளவிடமுடியாத அன்பின் காரணமாக அவருக்கு எதிராக ஏதாவது வார்த்தை சொல்லிவிட்டாலும் அந்நபரை மன்னிப்பதாகக் கூறும் ஆண்டவர் தூய ஆவியானவரைப் பழித்துரைப்பவருக்கு மன்னிப்பே கிடையாது என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார். மேலும் ஆவியில் நிரம்பி ஆண்டவரால் வழிநடத்தப்படும் நாம் எந்த இடத்திலும் எந்த வேளையிலும் என்னபேசுவது என்று கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை. நிரந்தர விழிப்புறுதலில் நாம் இருக்கையில் நிச்சயமாக எம்மை அவர் கலக்கடைய விடாமல் வழி நடத்துவார் என்ற நம்பிக்கையையும் இன்றைய நற்செய்த எமக்குத் தருகின்றது.

**எமது பக்கம்**

எனது நிலைப்பாடு என்ன? எதற்கெடுத்தாலும் என்ன செய்வது? என்ன பேசுவது? என்று கலங்கித் தவிக்கின்றேனா? தவிப்பின் காரணமாக ஆண்டவரை மறுதலிக்கின்றேனா? ஆவியானவரை பழித்துரைக்கின்றேனா?

**அனுபவமொன்று**

அண்மையில் ஒரு கூட்டத்தில் ஆண்டவரை அறியாத மக்கள் ஆவியானவரை அவரது செயல் பாடுகளாகிய வார்த்தையின் புகழ்ச்சி, அங்க அசைவுகளின் புகழ்ச்சியை இகழ்ச்சியாகப் பேசி, ஆண்டவரின் பாதையில் செல்லும் எமது மனங்களைப் புண்படுத்தினர். எனக்கு அருகிலிருந்த எனது நண்பியொருத்தி, ஏதாவது அதற்கு எதிராக என்னைப் பேசுமாறு வற்புறுத்தினார். இருப்பினும் இறைஆவியில் வழிநடத்தப்படும் என்னிலிருந்து எவ்வித வார்த்தையும் வெளிப்படவில்லை. எனது வாயை ஏதோ ஒரு சக்தி கட்டிப்போட்டிருந்ததை நான் உணர்ந்தேன். அது ஆவியின் செயல்பாடு என்பதை நான் உணர்ந்தேன். எனவே மௌனம் எனும் வார்த்யையின் வழி ஆவியானவர் செயல் பட்டு அவ்விதமாகப் பேசியவர்களுக்கு ஆண்டவர் பதிலளித்தார். அதனூடாக அக்கூட்டத்தில் நாங்கள் ஆண்டவரின் பிள்ளைகள் என்பதனை அங்கிருந்தவர்களுக்கு ஆண்டவர் உணர்த்தினார்.

**செபம்**

அன்பின் ஆண்டவரே! நிரந்தர விழிப்புறுதலினூடாக எல்லா இடத்திலும் உமது ஆவியினால் இயக்கப்பட்டு உமது விருப்பத்தை நிறைவேற்றிடும் உமது பிள்ளையாக வாழ்ந்திட வரமருளும் ஆமென்.

பாலகரின் மழலையிலும்
குழந்தைகளின் மொழியிலும்
வலிமையை உறுதிப்படுத்தி உம்
பகைவரை ஒடுக்கினீர்

(திபாடல் 8 : 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**17 ஞாயிறு**

முதலாம்வெளிப்பாடு
வி. ப17 : 8 - 13

பதிலுரைப்பாடல்
திருபா
121 : 1 - 8

2தீமோத்
3 :14 - 4 : 2

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
18: 1 - 8
பொ. கா. 29ம் ஞாயிறு

எல்லாம் வல்ல இறைவனைப் பற்றி அறிந்து கொள்வதற்காக வேண்டி பல்வேறு வழிகளில் ஈடுபடுகின்றோம். கிறிஸ்தவரல்லாதவர் கூட இன்று பல்வேறு வழிகளில் அவ்வாறான அறிவைத் தெளிவைப் பெற்றுக்கொள்கின்றனர். இன்றைய நாளில் எமது விசுவாச வாழ்க்கைக்கு ஒளியூட்டிக்கொண்டு இறைவன் பேரிலான விசுவாசத்தை அனுபவிப்பதற்காக வேண்டி திருச்சபைத் தாயானவர் இன்று எமக்கு அழைப்பு விடுக்கின்றார். அத்தோடு எல்லாம் வல்ல இறைவனானவர் அன்பாவார். ஆனபடியாலேயே அவர் எமக்காக வேண்டி தோன்றி நிற்கின்ற, சமர்புரிகின்ற, நீதியை நிலைநாட்டுகின்ற எமது மீட்பராவார் என்ற நற்செய்தியை ஏனையவர்களுக்கும் வெளிப்பாடாக்க வேண்டும். அதன் சாட்சியாளராக வேண்டுமெனவும் நினைவு கூருகின்றார். அதனை நாம் அறிவினால் அன்றி அனுபவத்தினாலேயே செய்ய வேண்டும். உயிருள்ள இறைவனை அனைத்து நிகழ்ச்சிகளினூடாகவும் அனுபவிப்பதற்கான வல்லமையை எம் துணையாளராம் ஆவியானவரிடம் வேண்டுவோம்.

**முதலாவது வெளிப்பாட்டிலிருந்து**

.....மோசே யோசுவாவை நோக்கி ஷநம் சார்பில் தேவையான ஆள்களைத் தேர்ந்தெடு..... கையில் பிடித்தவாறு குன்றின் உச்சியில் நின்று கொள்வேன்; என்றார்... மோசே தம் கையை உயர்த்தியிருக்கும் போதெல்லாம் இஸ்ரயேலர் வெற்றியடைந்தனர். அவர் தம் கையைத் தளரவிட்ட போதெல்லாம் அமலேக்கியர் வெற்றியடைந்தனர்... யோசுவா அமலேக்கையும் அவனுடைய மக்களையும் வாளுக்கிரையாக்கி முறியடித்தார்....

**ஒளியின் விழிப்புறுதல்**

அமலேக்கியருக்கும், இஸ்ரயேலருக்கும் இடையில் நடந்த யுத்தத்தில் மோசே இறைவனுடைய வல்லமையை உணர்த்துகின்ற கைத்தடியை மேலே உயர்த்திக்கொண்டு இறைவன் திருமுன் நின்றவாறு தனது விசுவாசத்தைக் காண்பித்ததன் பிரதிபயனாக அமலேக்கியர் தோற்கடிக்கப்பட்டனர். மோசேயின் விசுவாசம் எத்துனையானது? கடவுளில் தங்கி வாழ்வதையல்லவா அது எடுத்தியம்புகின்றது. அடுத்து மோசே ஆரோன், கூர், என்பர்களுள் இருந்த சங்கமமான விசுவாசப்படி மக்களது வெற்றிக்குக் காரணமாகியது. எமது வாழ்வில் முகங்கொடுப்பதற்கு நேரிடுகின்ற அல்லல்கள், துன்பங்கள், பிரச்சினைகள்,வேதனைகள் தனிமைகள் முன்னிலையில் எல்லாம் வல்லவர் முன்னிலையில் தனித்தும் சங்கமமாகவும் தளராத விசுவாசத்துடன் தோன்றி நிற்பதற்காகவும் நாம் அழைக்கப்படுகின்றோம்.

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

அவர்கள் மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதற்கு இயேசு ஒரு உவமை சொன்னார். ஒரு நகரில் நடுவர் ஒருவர் இருந்தார். அவர் கடவுளுக்கு அஞ்சி நடப்பதில்லை. மக்களையும் மதிப்பதில்லை. அந்நகரில் கைம்பெண் ஒருவரும் இருந்தார். அவர் நடுவரிடம் போய் என் எதிரியைத் தண்டித்து எனக்கு நீதி வழங்கும் என்று கேட்டுக்கொண்டேயிருந்தார்... அவர் நான் கடவுளுக்கு அஞ்சுவதில்லை. மக்களையும் மதிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் இக்கைம்பெண் எனக்குத் தொல்லை.... தேர்ந்துகொண்டவர்கள் அல்லும்பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது.... ஆயினும், மானிடமகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ?; என்றார்.

**ஒளியில் விழிப்புதல்**

தமக்கும் தந்தைக்கும் இடையில் இருந்த ஆழமான தொடர்பின் அடித்தளத்தை இயேசு இந்த உவமையின் வழியாக வெளிப்பாடாக்குகின்றார். '*தாம் தேர்ந்து கொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது கடவுள் அவருக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? அவர்களுக்குத் துணை செய்யக் காலம் தாழ்த்துவாரா?*'

ஆண்டவருக்கு தந்தை பேரிலிருந்த அனுபவம் தான் இதுவாகிறது. உண்மையான கிறிஸ்தவர்கள் என்ற வகையில் ஆண்டவரும் அத்தகைய தொடர்பினைத் தான் எம்மிடமும் எதிர்பார்க்கின்றார். எமது தேவைகளை கடவுள் அறிந்திருந்த போதிலும், அவற்றினைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டி எமது பங்களிப்பும் தேவைப்படுகின்றது. அவருக்கு எல்லாம் தெரியும் தானே. தேவையானவற்றைத் தருவார் என்ற நம்பிக்கையில் தொடர்பற்றவர்களாக சோம்பேறிகளாக இருப்பதற்கான அழைப்பையல்ல நாம் பெற்றுள்ளோம். ஆண்டவர் எம்மிடமும் இக்கேள்வியை இன்றும் கேட்கின்றார். மானிடமகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ?' ஆவியானவரே, தடைகள், சங்கடங்கள், அவமானங்கள், சவால்கள் வரும்போது அவற்றைத் தாண்டிச் செல்வதற்காக எம்மைத் திடப்படுத்தியருளும்.

**இரண்டாவது வெளிப்பாட்டிலிந்து**

...நீ சற்று உறுதியாய் அறிந்தவற்றில் நிலைத்து நில். யாரிடம் கற்றாய் என்பது உனக்குத் தெரியுமே... கடவுள் முன்னலையிலும்......... நான் ஆணையிட்டுக் கூறுவதுளூ இறை வார்த்தையை அறிவி. வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்கா-விட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாயிருளூ கண்டித்துப் பேசுளூ கடிந்து கொள், அறிவுரை கூறுளூ மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு;

**ஒளியின் விழிப்புறதல்**

உயிர்த்த ஆண்டவரை ஆசானாக்கிக் கொண்டு இறை வார்த்தையை எல்லாச் சந்தர்ப்பங்ளிலும் எல்லாஇடங்களிலும் அறிவிக்க வேண்டியது கிறிஸ்தவனது கடமையாகிறது என பவுலடிகளார் அறிவுறுத்துகின்றார். கிறிஸ்தவ வாழ்வில் வெளிப்படை அடையாளம் தான் இறைவார்த்-தைக்குச் சாட்சி பகர்வது. வார்த்தையில் மாத்திரம் அல்லாது செயலினாலும் வார்த்தையின் சாட்சியாளராக வேண்டும். அப்போது கிறிஸ்துவில் வாழ்வையே வாழ்வாக்கிக் கொண்டவர்களாவோம்.

இறைவார்த்தையை, வார்த்தையானவரை அனுபவிக்கின்ற அளவுக்கு, அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான தாகம் எம்முள் ஏற்படும்.

**செபம்.**

இறைதகப்பனே, உமது திருவுளத்தை ஆவியானவர் வழி அறிந்தவர்களாக அதனுள் வாழுவதற்கான தாகத்தை எம்முள் அதிகரிக்கச் செய்தருளும்.

விண்ணையும் மண்ணையும்
உண்டாக்கிய ஆண்டவரிடமிருந்தே
எனக்கு உதவி வரும்.
அவர் உம் கால் இடறாதபடி
பார்த்துக்கொள்வார். உம்மைக்
காக்கும் அவர் உறங்கிவிடமாட்டார்.

(தி.பா 121: 2-3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

18 **திங்கள்**

முதலாம்வெளிப்பாடு
2தீமோத்தி
4 : 9 - 17

பதிலுரைப்பாடல்
திருபா 145:10-13,
17 - 18

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
19: 1 - 9

நற்செய்தியாளர்
புனித லூக்கா
நினைவு

**நற்செய்தியிலிருந்து**

இதற்குப் பின்பு ஆண்டவர் வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து. அவர்களைத தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்குமுன்னே இருவர் இருவராக அனுப்பினார். அப்போது அவர் அவர்களிடம் கூறியது அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள். புறப்பட்டுப் போங்கள் ஓநாய்களிடம் ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகின்றேன். பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ வேறு எதுவும் நீங்கள் எடுத்துச்செல்ல வேண்டாம்.....

**ஒளியின் விழிப்பு**

இந்த இரண்டு வெளிப்பாடுகளையும் வாசித்துத் தூய ஆவியானவருக்கு விழிப்புற்று அவரது ஒளியை வேண்டி, அவ்வொளியில் இயேசு ஆண்டவரின் உள்ளாந்தரத்தைத் தியானிப்போம். இயேசு தமது தூதுரை சேவைக்காகத் தெரிந்துகொண்ட வேறு எழுபத்திரண்டு பேரை அனுப்புவதற்கு முன்பு அவர்களோடு உரையாடுகின்றார். முதலில் செபத்தின் முக்கியத்துவம் அறிவிக்கப் படுகின்றது. இறைபணிக்காக மக்கள் முன்வர வேண்டும் என்ற ஆவல் இயேசுவில் இருந்தது. மனித மட்டத்தால் ஒன்றுமே செய்ய முடியாது. இறை ஆசி அவசியம். இறைதந்தையை மன்றாடுங்கள் எனக் கூறுகின்றார். புறப்பட்டுப் போங்கள் என்று அவர்களை வழியனுப்பும் இயேசுநாதர் அவர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றார். ஓநாய்களால் ஆட்டுக்குட்டிகளுக்கு ஏற்படும் ஆபத்துக்களைப் போல உங்களுக்கும் பல இன்னல்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்க நேரிடும். நம்பிக்கையுடன் செயற்படுங்கள். நான் என்றும் உங்களுடன் இருப்பேன். என்னும் உறுதிவாக்கை மனதில் கொண்டு எதனையும் எடுத்துச்செல்ல வேண்டாம். ஆண்டவரில் முழு நம்பிக்கையுடன் வாழும் பொழுது அவர் குறைவுகளை நிறைவு செய்வார் என்பதை ஞாபகப்படுத்துகின்றார்.

**எம்மேல்**

ஆடுகளுக்கும ஓநாய்களிடமிருந்து ஆபத்து ஏற்படுவதுபோல இறைவனின் நற்செய்தியாளர்களுக்கும் தமது சேவையில் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதை இயேசுநாதர் நன்கு அறிந்திருந்தார். முன்கூட்டியே தம் வார்த்தைகளால் சீடர்களை திடப்படுத்தினார். இன்று நாமும் இவ்வாறான எதிர்பார்ப்புக்களுக்கு முகங்கொடுக்கும் பொழுது மனம் உடைந்த நிலைக்கு உள்ளாகின்றோம் அல்லவா? திருமுழுக்கைப் பெற்றுள்ள நாம், இறைவனுக்கு சான்று பகிர அழைக்கப்பட்டுள்ளோம் என்பதில் விழிப்புற வேண்டும். இறைவனில் நம்பிக்கையுடன் வாழும்பொழுது அவர் அன்பை எம் வாழ்வில் அனுபவிக்கலாம். இறைவனுக்கு முதலிடம் அளித்து இன்பத்திலும் துன்பத்திலும் அவரைப் போற்றிப் புகழ்வோம். *உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை ஆண்டவரே* என்று அவரிடம் சரணடைவோம். செப வாழ்வில் இறைவனோடு இணைவோம். சுயநலத்தை வெறுத்து அடுத்தவருக்காக வாழ முயல்வோம்.

**செபத்திற்குள்ளாகுவோம்**

அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளராம் தந்தையிடம் செபிக்க எம்மை அழைக்கும் இயேசுவே, உமது திராட்சைத் தோட்டத்தில் தங்கள் கடமைகளை தூய ஆவியின் வழிநடத்தலில் கனிதரும் முறையில் ஆற்றுவதற்கான வல்லமையை அனைவருக்கும் அளித்தருளும். ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**19 செவ்வாய்**

முதலாம்வெளிப்பாடு
எபேசி 2 : 12-22

பதிலுரைப்பாடல்
திரு.பா
85 : 8 -13

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
12 : 35 - 38

புனிதர்களான
பிரபு ஜான்,
ஈசாக்கு ஜோகு
சிவையின் பவுல்
நினைவு

**நற்செய்தியிலிருந்து**

உங்கள் இடையை வரிந்து கட்டிக் கொள்ளுங்கள். விளக்குகளும் எரிந்து கொண்டிருக்கட்டும். திருமண வீட்டிற்குப் போய் இருக்கும் தம் தலைவர் திரும்பி வந்து கதவைத் தட்டும் போது உடனே அவருக்குக் கதவைத் திறக்கக் காத்திருக்கும் பணியாளருக்கு ஒப்பாயிருங்கள். தலைவர் வந்து பார்க்கும் போது விழித்திருக்கும் பணியாளர்கள் பேறு பெற்றவர்கள். அவர் தம் இடையை வரிந்து கட்டிக்கொண்டு அவர்களைப் பந்தியில் அமரச்செய்து அவர்களிடம் வந்து பணிவிடை செய்வார் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகின்றேன். தலைவர் இரவின் இரண்டாம் காவல் வேளையில வந்தாலும் மூன்றாம் காவல் வேளையில் வந்தாலும் அவர்கள் வழிப்பாயிருப்பதைக் காண்பாரானால் அவர்கள் பேறுபெற்றவர்கள்.

**ஒளியின் விழிப்பு**

என் ஆன்மாவின் அன்பார்ந்தவரான தூய ஆவியானவரே! நற்செய்தியில புதைந்நதிருக்கும் நல்வார்த்தையானவரைக் கண்டு கொள்ள என்னை வழிநடத்தும்.

தலைவரின் வருகைக்காக மக்கள் எவ்விதம் காத்திருக்க வேண்டும் என்பதை இன்றைய நாளுக்குரிய நற்செய்தி வழியாக ஆண்டவர், எமக்கு வெளிப்படுத்துகின்றார். தலைவர் எச்சாமத்தில் வந்தாலும், பணியாளர்கள் விழிப்பொடு தயாராகி, அவரை வரவேற்கக் காத்திருக்க வேண்டும் எனக்கூறும் ஆண்டவர், '*உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவுமில்லை* எனும் விழிப்புணர்வி வாழ பணியாளர்களுக்கு அழைப்புக் கொடுக்கின்றார். அப்படிப்பட்டவர்கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில் தலைவரே, அவர்கள் மத்திக்கு வந்து அவர்களிடையே பணிவிடை புரிவார். இயேசு ஆண்டவர் வெளிப்படுத்திய வார்த்தையின் மறைபொருள் இன்று எம் மத்தியில் வாழ்வாகி கொண்டிருக்கின்றது இறைஅரசினைக் கட்டி எழுப்பிட தாகத்தோடு செயலபடுகின்றவர்கள் மத்தியில் உயிர்த்த ஆண்டவரே! அவர் தம் வல்லமையை வெளிப்படுத்தியவாறு, பணி புரிகின்றார். என்பது விசுவாசிகள் ஒவ்வொருவரதும் அனுபவமாகும்

**காத்திருப்போம்**

இரண்டாம் வருகைக்காக் காத்திருக்கும் எமது உடல், உள்ளம், ஆன்மா தூண்மை பெற்றதாகி, எம் சிந்தனை, சொல், செயல் இறைவிருப்பத்தை நிறைவேற்றும் தாகம் கொண்டதாகி இருக்கின்றதா? திருமுழுக்கின் வழியாக இறை அரசைக் கட்டியெழுப்ப எமக்கு கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்ற கிறிஸ்தவர்கள் ஆகிய நாம் ஒவ்வொருவரும் ஆயத்தமா? ஆம் நாம் ஒவ்வொருவரும் ஆண்டவரை வரவேற்கக் காத்திருந்து பணிபுரிவோம்.

**செபம்**

அப்பா! தந்தாய்! உமது விருப்பத்தை நிறைவேற்றிய திருமகனாம் இயேசு ஆண்டவர் எமக்குக் கற்றுத் தந்த வழியில் பயணம் சென்று, உம்மை மகிமைப்படுத்தும் வரத்தினை எம்மனைவருக்கும் அளித்தருளும் ஆமென்.

அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு
அவரது மீட்பு அண்மையில்
உள்ளது என்பது உறுதி. நம்
நாட்டில் அவரது மாட்சி
குடிகொள்ளும்.

(தி. பா. 85 : 9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**20 புதன்**

முதலாம்வெளிப்பாடு
எபேசி
3 : 2 - 12

பதிலுரைப்பாடல்
திருபா
எசாயா12 : 2 -6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
12: 39 - 48

புனித
அந்தோனி மரிய
கிளாரெட்

**பரிசுத்த நற்செய்தி**

எந்த நேரத்தில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாளருக்குத் தெரிந்திருந்தால் அவர் தம் வீட்டில் கன்னமிட விடமாட்டார் என்பதை அறிவீர்கள். நீங்கள் ஆயத்தமாய் இருங்கள்: ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார்... ஆனால் அதே பணியாள் தன் தலைவர் வரக் காலந்தாழ்த்துவார் எனத் தன் உள்ளத்தில் சொல்லிக்....... அப்பணியாளர் எதிர்பாராத நாளில் . அறியாத நேரத்தில் அவனுடைய தலைவர் வந்து அவனைக் கொடுமையாகத் தண்டித்து நம்பிக்கைத் துரோகிகளுக்கு உரிய இடத்துக்குத் தள்ளுவார். தன் தலைவரின் விருப்பத்தை அறிந்திருந்தும் ஆயத்தமின்றியும் அவர் விருப்பப்படி செயல்படாமலும் இருக்கும் பணியாள் நன்றாய் அடிபடுவான்..... மிகுதியாக் கொடுக்கப்பட்டவரிடம் மிகுதியாகவே எதிர்பார்க்கப்படும். மிகுதியாக ஒப்படைக்கப்பட்டவரிடம் இன்றும் மிகுதியாக் கேட்கப்படும்.

**ஒளியின் விழிப்பு**

வாரும் படைப்பாளராம் தூய ஆவியானவரே!ஒவ்வொரு உள்ளங்களையும் ஊடுருவி காண்பதில் ஆற்றலானவரே! இறைமகனின் உள்ளத்தினைக் காண்பதற்கு எனக்கு உதவியருளும். இரண்டாம் வருகையைப் பற்றி ஆழமாக எடுத்துக்கூறும் இயேசுநாதர் ஆயத்தமான நிலையில் இருக்குமாறு பணிக்கின்றார். பேதுருவின் கேள்விக்கு எதிர்மாறாக இயேசு பதில் அளிக்கின்றார். தலைவர் அமர்த்திய ஊழியன் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதனையும் எவ்வாறு பணிபுரிய வேண்டும் என்பதனையும் தெளிவுபடுத்துகின்றார். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றும் பணியாளர் பேறுபெற்றவர். அவரைக்கண்டு தலைவர் பூரிப்படைக்கின்றார். ஆயினும் இதற்கு மாறாக செயல்படும் பணியாளனை எச்சரிக்கின்றார். ஆண்டவருடைய விருப்பத்திற்கு மாறாக நான் என்ற அகந்தையில் வாழ்பவர்களை நம்பிக்கைத் துரோகிகள் என்று பெயர் இடுகின்றார். ஆண்டவரரோடு நெருங்கிய உறவுகொண்ட பணியாளன் எக்கணமும் தந்தையின் விருப்பத்தின்படி செயல்பட வேண்டுமெனவும், செயல்படாவிட்டல் தண்டனை பெறுவான் எனவும் வெளிப்படையாகக் கூறுகின்றார்.

**எம்பேரில்**

ஒருகணம் இந்த வருடத் தலைப்பைத் திரும்பிப் பார்ப்போம். நானும், நீங்களும் எவ்வளவு தூரம் இத்தலைப்புக்குள் வாழ்கின்றோம்? இயேசுக்கிறிஸ்து ஆண்டவர் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி அவர் பணி செய்தது போல் நாமும் இறை விருப்பம் தேடி வாழ்வதற்கு வரம் வேண்டுவோம்.

**செபம்**

பரிசுத்தமான ஆண்டவரே! உம்விருப்பம் தேடி உம்பணி செய்திட எனக்கு உதவியருளும்.

இறைவன் என் மீட்பர். அவர்மேல் நம்பிக்கை வைக்கின்றேன். நான் அஞ்சமாட்டேன். ஆண்டவரே என் ஆற்றல். அவரையே நான் பாடுவேன் என் மீட்பும் அவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

21 **வியாழன்**

முதலாம்வெளிப்பாடு
எபேசி 3 : 14-21

பதிலுரைப்பாடல்
திருபா
33 : 1 -2,4-5,11-12,18-19

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
12 : 49 - 53

**பரிசுத்த நற்செய்தி**

"மண்ணுலகில் தீ மூட்ட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். ஆயினும் நான் பெறவேண்டிய ஒரு திரு முழுக்கு உண்டு. அது நிறைவேறுமளவும் நான் மிகவும் மன நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்றேன். மண்ணுலகில் அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை பிளவு உண்டாக்கவே வந்தேன் என உங்களுக்குச் செல்லுகிறேன்... தந்தை மகனுக்கும், மகன் தந்தைக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமியார் மருமகளுக்கும் மருமகள் மாமியாருக்கும் எதிராகப் பிரிந்திருப்பர்"

**ஒளியின் விழிப்பு**

தூய ஆவியானவரே! என் ஆத்துமாவின் அன்பார்ந்தவரே! இன்றைய நற்செய்தியினூடாக இயேசு ஆண்டவரின் உள்ளரங்க அனுபவத்தினைக் காண எம்மை முழுமையாக வழிநடத்தும். தூய ஆவியானவரின் வழிநடத்தலுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த இறைமகன் அப்பா தந்தையின் விருப்பத்தினை நிறைவேற்றும் தாகத்துடன் செயற்பட்டார். மண்ணுலகில் வாழும் எல்லா மக்களுக்கும் தூய ஆவியானவரைப் பெற்றுக் கொடுப்பதே இறை அப்பாவின் திருச்சித்தம் என்பதைக் காணுகின்றார். மண்ணுலகில் தீ மூட்டுவதற்காக தமது உயிரையே சிலுவை மரத்தில் தியாகம் செய்ய வேண்டும் என்பதைக் காணும் அவர் அத்திருமுழுக்கு நிறைவேறுமளவும் மன நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறேன் என எடுத்துக் காட்டுகின்றார். அப்பா தந்தையின் விருப்பத்தினை நிறைவேற்றிட ஆழமான தாகத்துடன் மனவேதனையுடனும் செயற்படுகின்றார். அப்பா தந்தையின் அன்பில் மூழ்கி இருந்த இறைமகன் அப்பாவின் ஒலிக்கு குரல்கொடுத்தவாறு அவரின் வாயில் இருந்து வெளிவரும் ஒவ்-வொரு வார்த்தைக்கும் விழிப்புறுகின்றார். இறை அப்பாவின் திரு-விருப்பத்தினை நிறைவேற்றும் போது குடும்பத்தில் சங்கத்தில் உறவில் உண்டாகப்போகும் பிளவுகளை எடுத்-துக்காட்டுகின்றார். அவரை ஒரே ஆண்-டவராக ஏற்று அவர் பின் செல்லும் போது ஏற்படும் நெருக்கடிகளை எடுத்துக்காட்டி அந்த சவாலை எற்று உலகெங்கும் நற்செய்தியினை எடுத்துச் செல்ல இன்று எமக்கும் அழைப்புவிடுகின்றார்.

**எமது பேரில்**

இறை அரசிற்கான மகனாக மகளாகத் தேர்ந்து எடுக்கபட்ட நாம் எமது அழைப்பிற்கு விழிப்புறுவோம. மண்ணுலகில் தீ மூட்ட வந்தேன் என எடுத்துக் கூறும் இறை மகனின் வார்த்தையின் முன்னல் சிறிது தோனறி நிற்போம். அத் தீ எம்மில் பற்றி எரிகின்றதை எம்மால் அனுபவிக்க முடிகின்றதா? எங்களுடன் தங்கியிருக்கும் எம்முள் வீற்றிருக்கும் அத்தீயை மற்றவர்களிடம் எடுத்துச் செல்லும் தாகம் எம்முள் இருக-கின்றதா? இறை அரசிற்காக உடைந்து நொருங்கி திரு முழுக்குப்பெற்று ஆண்டவரின் விருப்பத்தினை நிறைவேற்றும் மகனாக மகளாகவா செயற்படுகின்றறோம்? நாம் இருக்கும் நிலைக்கு விழிப்பறுவோம். எம்மை வழிநடத்த தூய ஆவியானவருக்கு இடமளித்து இறை அப்பாவின் விருப்பத்தினை நிறைவேற்றும் தாகத்தை ஏற்படுத்திக்கொள்வோம்.

**செபம்**

அன்பின் ஆண்டவரே, உமது திருக்குமாரனுள் பற்றி எரியும் தீயை எமது இதயங்களில் பற்றி எரியச் செய்யும். அதனூடாக உமது விருப்பததை நிறைவேற்றும் மகனாக மகளாக வாழ அருள் பொழியும்.

தமக்கு அஞ்சி நடப்போரையும் தம் பேரன்புக்காகக் காத்திருப்போரையும் ஆண்டவர் கண்ணோக்குகின்றார்

(தி.பா 33 : 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

22 **வெள்ளி**

முதலாம்வெளிப்பாடு
எபேசி
4 : 1 - 6

பதிலுரைப்பாடல்
திரு.பா
24 : 1 - 6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
12: 54 - 59

**முதலாம் வெளிபாடு**

ஆதலால் ஆண்டவர் பொருட்டு கைதியாக இருக்கும் நான் கெஞ்சிக்கேட்கின்றேன். நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப வாழுங்கள். முழுத் தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி, அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழு முயற்சி செய்யுங்கள். நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல உடலும் ஒன்றே. தூய ஆவியும் ஒன்றே. அவ்வாறே ஆண்டவர் ஒருவரே. நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே. திருமுழுக்கு ஒன்றே.

**ஒளியின் விழிப்பு**

புனித பவுல் அடிகளார் எபேசிய சங்க மக்களுக்கு எழுதிய கடிதம் இன்றைய நாளில் எமக்கு எழுதுகின்ற கடிதத்தைப் போல் இருப்பதைக் கண்டேன். அவர் ஆண்டவர் கொடுத்த அழைப்பிற்காக கைதியாகி இருக்கின்றார். ''கைதி'' என்பவர் யார்? சிறையில் அடைக்கப்பட்டவர். சுதந்திரத்தை இழந்தவர் என்றும் பொருள் நல்வழிப்படுத்திட அழைப்பின் பொருட்டுக் கைதியாகி இருக்கின்றார் மக்களை சந்திக்கையில் அவர்கள் சிறையுண்டு இருந்த அடிமைத்தளை-களை பிரிவினை வாக்கு வாதங்களை கண்டார். சங்கம உறவில் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கெள்ளாமை. முரண்பாடுகள் அனைத்தையும் கண்டு. அவர்கள் இருக்கும் நிலையை காண வழிகாட்டுகின்றார்.

**எம் பேரில்**

ஒற்றுமையில் சங்கமாக இணைந்து வாழ்வதற்கு இருக்க வேண்-டிய பண்புகளே தாழ்மை, கனிவு, பொறு-மை, அன்பு, அமைதி இவையின்றி சங்கம் சங்கமாக முடியாது என்பதை வெளிப்படுத்தும் பவுலடிகளார், எனது சங்கத்திற்கு கூறுவது என்ன? பாதங்கழுவி மற்றவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய தாழ்மை என்னுள் இருக்கிறதா? அன்றேல் ஒருவரை எனக்குப்-பிடிக்கா விட்டால் என்றோ நிகழ்ந்-த நினைவை என் மனதில் வைத்த வண்ணம் பழிதீர்க்கும் பாணியில் என்றும் வாழ்கின்-றேனா? மற்றவரை இரக்கத்துடன் ஏற்றுக்கொள்ள முடிகின்றதா? மற்றவர் பெலயீனங்களை பொறுமையுடன் சகித்துக்கொள்-ளும் மனத்திடன் என்னுள் இருக்-கின்றதா? மற்றவர் தேவைகளை நிறைவேற்றும் அன்பள்ளம் என்-னில் உண்டா? அமைதியில் அனைத்தையும் கிரகித்துக்கொள்-ளும் உள்ளமும் கோபத்தினால் பிளவுகளை ஏற்படுத்தாத அமைதி உள்ளமும் என்னுள் உண்டா? ஆம் நிச்சயமாக நற்பண்புகள் என் வாழ்வில் புலப்படுகையில் இறை வல்லமை என் வழியாகப் புலப்-பட்டு இறை அரசின் மகிமை என் சங்கத்தில் புகழ்ச்சியில் கிராமத்-தில் நாட்டில் வெளியாகும்.

**செபம்**

அன்புத் தந்தாய்! உமது குழந்தையாக வாழ அழைப்புப் பெற்ற என்னை ஒவ்வொரு கணத்-திலும் நல்வழிப் படுத்தியருளும். அன்பே உருவான உம்மை வெளிப்படுத்த அன்பானவரால் என்னை வழிநடத்தியருளும். உமது அரசு எம்மத்தியில் உரு-வாக என்னை வழிநடத்தும். உமது விருப்பத்தை தவிர வேறு எதையும் பின்பற்றிச் செல்லா-திருக்க என்னை வழி நடத்திய-ருளும் ஆமென்.

பொய் வழியை என்னைவிட்டு
விலக்கியருளும்; உமது
திருச்சட்டத்தை எனக்குக்
கற்றுத்தாரும்
(தி. பாட 119: 29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**23 சனி**

முதலாம்வெளிப்பாடு
எபேசியர்
4 : 7 - 16

பதிலுரைப்பாடல்
திருபா
122 : 1 - 5

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
13 : 1 - 9

கப்பெஸ்த்தரானோ
நகர் புனித
யோவான் நினைவு

**பரிசுத்த நற்செய்தி**

அவ்வேளையில் சிலர் இயேசுவிடம் வந்து பலி செலுத்திக் கொண்டிருந்த கலிலேயரைப் பிலாத்து கொன்றான் என்ற செய்தியை அறிவித்தனர். அவர் அவர்களிடம் மறுமொழியாக இக்கலிலேயருக்கு இவ்வாறு நிகழ்ந்ததால் இவர்கள் மற்றெல்லாம் கலிலேயரையும் விடப் பாவிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்லுகிறேன். மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அவ்வாறே அழிவீர்கள். சீலோவாமிலே கேபுரம் விழுந்து பதினெட்டுப் பேரை கொன்றதே. அவர்கள் எருசலேமில் குடியிருந்த மற்ற எல்லாரையும் விடக் குற்றவாளிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே அழிவீர்கள் என்றார். மேலும் இயேசு இந்த உவமையைக் கூறினார். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)

**ஒளியின் விழிப்பு**

அன்பின் ஆவியானவரே, இந்நற்செய்தியினுள் இறைமகன் உள்ளரங்கம் தியானிக்க உம் அருட்கனிகளைப் பொழிந்தருளும். பாவத்தின் தண்டனை அழிவு, மரணம் தீராத நோய் சமுதாயத்திலிருந்து பிரிந்து வாழ்தல் போன்ற எண்ணத்தைக் கொண்டிருந்த யூத மக்கள், இறைவனுக்குப் பலி செலுத்திக்கொண்டிருக்கும் போதும் பிலாத்து கொன்றான் என்று கூற, சீயோவாமிலே கோபுரம் விழுந்து மக்கள் இறந்தார்களே அதற்கும் காரணம் அவர்கள் பாவிகளா என்று இயேசு வினவுகின்றார். மனமாற்றத்தின் முக்கியத்துவத்தை இயேசு எடுத்துக்காட்டுகின்றார். இறையாட்சியின் வருகையைப் பற்றிப் போதிக்கும் இயேசு இதனை அனுபவிக்க மனமாற்றம் மிகவும் அவசியம் என்பதை விளக்கிக் கூறுகின்றார். உலக செல்வங்களை இழக்க நேரிடலாம்; மனமாற்றத்துடன் இறைவனோடு தொடர்புகொள்ளும்போது அவர் குறைகளை நிறைவு படுத்துகின்றார். என்ற நம்பிக்கையில் வாழ அழைக்கின்றார். காய்க்காத அத்திமரத்தின் உவமை மூலம் இறைவன் அன்பார்ந்தவர் பொறுமையுள்ளவர், தண்டிக்கத் தாமதம் கொள்பவர் ஆயினும் அவர் அன்பாயிருந்து விலகும்போது அன்பினால் தண்டிப்பவர் தெளிவுப்படுத்துகின்றார் என்பதை மனமாற்றத்திற்காக இன்று பெற்றுள்ள அழைப்பின் விழிப்புறுவோம்.

**எம்பேரில்**

காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கிவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்னும் திருமுழுக்கு யோவானின் குரலொலி இன்றும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. இன்று எமது வாழ்வின் நோக்கு எதுவாக இருக்கவேண்டும்?

பணம் பொருளை சேமித்து உயர் நிலையில் வாழ வேண்டும்; மற்றவர் கௌரவத்தில் நான் முதலிடம் பெறவேண்டும் என்பதா அல்லது நிலை வாழ்வுக்காக என்னையே நான் அர்ப்பணிக்க வேண்டும். உன்னத அன்புகள் நான்கினையும் உணவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற தாகமா! உலகம் தரும் பெரும் சவால்கள் மத்தியிலும் தூய ஆவியில் விழிப்புற்று அவர் கொடைகளைப் பெற்று நிலையான வாழ்வைப் பெற்றுக்கொள்ள ஆசிப்போம். இறை சித்தம் நிறைவேற்றுவதைவிட எனக்கு வேறு ஒன்றுமே இல்லை என்ற மனநிலையோடு இயேசுவை தேடிச் செல்வோம்.

**செபம்**

அன்பின் தந்தையே உண்மையான மனஸ்தாபத்துடன் நிலை வாழ்வை நோக்கி எம்மை வழிநடத்தும். தூய ஆவியின் வழிநடத்தலில் தாழ்மையான உள்ளத்தோடு வாழ வரம் தாரும். ஒப்புரவு என்னும் அருட்கொடையின் வல்லமையை உணர்ந்து அடிக்கடி அதனைப்பெற்று நல்வாழ்வு வாழ என்னுள் தாகத்தை ஏற்படுத்தியருளும்.

ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்
(தி.பா 122 : 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**24 ஞாயிறு**

முதலாம்வெளிப்பாடு
சீராக்35 :
12 - 14,16 - 19

பதிலுரைப்பாடல்
திரு.பா 34 :1-2,
16 - 18, 22

இரண்டாம்வெளிப்பாடு
2தீமோத் 4 :6-8,
16 - 18

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
18 : 9 - 14

பொ. கா. 30வது
ஞாயிறு

உலக மறைபரப்பு
ஞாயிறு

'நீதிமான்கள் மன்றாடும் போது ஆண்டவர் செவிசாய்க்கின்றார். அவர்களை அனைத்து இடுக்கண்ணின்றும் விடுவிக்கின்றார்'

அன்றும், இன்றும் ஆண்டவரது திருமுன் தோன்றி நிற்பர்கள் அனுபவிக்கின்ற மகிமை நிரம்பிய வாழ்க்கையில் முக்கியத்துவம் பேரில் அவதானத்தைச் செலுத்துவதற்காக இன்றைய நாளில் நாம் அழைக்கப்படுகின்றோம். மகா உன்னதரைப் பற்றிய முக்காலங்களையும் ஒன்றிணைப்பவர் இயேசு ஆண்டவர் ஆவார். அவர் நீதியுள்ளவர், ஆள்பார்த்துச் செயறபடாதவர், அவரிடம் தஞ்சம் புகுவோருக்கு விலை மதிப்பற்ற வரப்பிரசாதங்களை அளிப்பவர் என்பனவற்றை இன்றைய வெளிப்பாடுகள் எமக்குக் காண்பிக்கன்றன. ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன். அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும்

**முதலாவது வெளிப்பாடு**

ஆண்டவர் நடுவராய் இருக்கின்றார். அவரிடம் ஒரு தலைச்சார்பு என்பதே கிடையாது.... கைவிடப்பட்டோரின் வேண்டுதலைப் புறக்கணியார்.... ஆண்டவரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பணி செய்வோர் ஏற்றுக்கொள்ளப்படுவர். அவர்களுடைய மன்றாட்டு முகில்களை எட்டும்... தங்களைத் தாழ்த்துவோரின் வேண்டுதல் முகில்களை ஊடுருவிச் செல்லும்... உன்னத இறைவன் சக்திக்கவரும் வரை அவர்கள் நற்பயிற்சியில் தளர்ச்சியடைவதில்லை. அவர் நீதிமான்களுக்குத் தீர்ப்பு வழங்குகின்றார். தம் தீர்ப்பைச்செயலபடுத்துகிறார்.

**ஒளியின் விழிப்புறுதல்**

பழைய உடன்பாட்டுக் காலந்தொட்டு வெளிப்பாடாகிய தந்தையின் விருப்பத்தை திட்டத்தை இறைமகன் இயேசு இனங்கண்டிருந்தார். அவரது அதிவிசேஷமான படைப்பாகிய மனிதரின் செயற்பாட்டின் வழியாகத் தீர்ப்பிடாது, ஆண்டவரின் மீண்டும் திரும்பி வருவதற்கு இடமளித்தார். மனம் வருந்துதலுடனும் நேர்மையுடனும் ஆண்டவரிடம் மன்றாடுவோரை அவர் ஆசீர்வதிக்கின்றார் என்பதை முதலாவது வெளிப்பாடு எடுத்துக் காட்டுகின்றது. ஆண்டவரது நீதியானது, நேர்மையானது மனிதனின் வரையறைக்குட்பட்ட நிலையை மேம்பட்டுச் செல்லுகின்றது.

இறைமகனின் இறுதி மன்றாட்டை ஆண்டவர் நிறைவேற்றினாரா? இயேசுவின வாழ்க்கை இறை நீதி, இறைசாதாரணத்துவம், உரிமை என்பன வழங்கப்பட்டது. மனித ஞானத்தினால் புரிந்து கொள்வதற்கு ஏற்ற நிலையிலா? ஆவியானவரே நல்ல தெளிவைத் தந்ருளும்.

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

"....இருவர் இறைவனிடம் வேண்டக் கோயிலுக்குச் சென்றனர். ஒருவர் பரிசேயர். மற்றவர் வரிதண்டுபவர். பரிசேயர் நின்று கொண்டு இவ்வாறு இறைவனிடம் வேண்டினார். கடவுளே நான்.... வரி தண்டுபவர் தொலையில் நின்றுகொண்டு கடவுளே பாவியாகிய என் மீது இரங்கியருளும் என்றார்... இயேசு பரிசேயரல்ல, வரிதண்டுபவரே கடவுளுக்கு ஏற்படையவராகி வீடு திரும்பினார்... "(நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)

**ஒளியின் விழிப்புறதல்**

கோயிலில் இறைவனைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கின்ற இடமாகும். மனிதர் அங்கு எவ்வாறு செல்லவேண்டும்? தந்தையுடன் உண்மையான தொடர்பு எவ்வாறு ஏற்படும்? என்பன பற்றி இயேசுவின் உள்ளரங்-கத்தைக் காண்பதற்கான ஒளியை ஆவியானவரிடம் வேண்டுவோம்.

பரிசேயர், தாம் நீதி நியமங்களைக் கடைப்பிடித்து நேர்மையாளனாக வாழ்-வதாகக் கூறுகின்றார். அதனைப் பகிரங்கமாகவும் வெளிப்படுத்துகின்றார். மனித நேர்மையை மேம்பட்டுச் செல்-லுகின்ற உண்மையான மனம் திரும்புதல் வேண்டுமென எம் ஆண்டவர் கூறுகின்றார். நான் என்ற அகம்பாவத்திலிருந்து, மமதை-யினின்று வெறுமையாகிய வாறு தந்-தையிடம் செல்லுகின்ற தாகம் எமக்குத் தேவையாகிறது. இறைமகன் இயேசு ஆவியானவரது உதவியுடனான வெறு-மையாகுதலோடே எப்போதும் தந்தையிடம் சென்றார். அங்கு எந்தவிதமான மனித முயற்சிகளும் இருக்க வில்லை போலும்!!!

இறை தகப்பனையே. இறை அரசினையே தமது ஒரே குளிக்கோளாகக் கொண்டவராக தமக்கென்று உரியன அனைத்தைதயும் இயேசு அர்ப்பணமாக்-கினார். ஆண்டவர் வாழுகின்ற உண்மை-யான ஆலயம் இயேசு ஆண்டவரே யாவார். இறைதகப்பன் திருமுன்னிலையில் தோன்றி நிற்பதற்கான தகைமையானது தமது தகுதியில்லை பெலயீனமான நிலை, தந்தையில் தங்கி வாழுதல் என்பனவையாகுமென இறைமகன் தமது வாழ்க்கை வாயிலாகவே எமக்குக் காண்பிக்கின்றார்.

**இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து**

....நான் இப்போதே என்னைப் பலியாகப் படைக்கின்றேன்... நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்... விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றிவாகையே. அதை இறுதிநாளில் ஆண்டவர் எனக்குத தருவார்..... எவரும் என் பக்கம் இருக்கவில்லை... ஆண்டவர் என் பக்கம் நின்று எனக்கு வலுவூட்டினார்.

**ஒளியில் விழிப்புறுதல்**

பவுலடிகளால் தமது அனுபவத்தினை சங்கத்தோடு பகிர்ந்து கொண்டவாறு மீட்பரது இரண்டாவது வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்துகின்-றார். நற்செய்தியில் பணியா-ளருக்கு உரித்தான துன்புறுவதன் புறக்கணிக்கப்படுதல், மரணத்தின் உயிர்ப்பின் அனுபவத்தின் பேற்றினை ஆண்டவரது வாழ்க்கை வழியாகவே கற்றுக் கொள்கிறோம். போலும் வாழ்க்-கையில் இயேசுவைச் சந்திக்காத அவர் உயிர்தெழுந்த இயே-வுவைச் சந்தித்தன் பிரதிபலனே இதுவாகிறது.

அனைத்திலும் ஆண்டவர் என்னோடு இருக்கிறார் என அனுபவிக்கக் கிடைக்கும் பாக்கியம் உன்னதமானதாக்கும். ஏனெனில், எம்மூடாக அவரே மகிமைப்படுத்தப்படுகின்றார்.

**செபம்**

நேரிய வாழ்வுக்கான வெற்றிவாகையை ஆண்டவர் எமக்காக ஒதுக்கியுள்ளார் என்பது உண்மையாகும். அதற்காக வேண்டி ஆண்டவர் என்னை எனது, குடும்பத்தை எனது சங்கத்தை அர்ப்பணமாக்கியருளும் ஆவி-யானவரே, ஆழமான மகிழ்-வுடனும் உள்ளரங்க நேர்மையு-டனும் பிரதிச் செயல் காண்பிப்பதற்கான பரிணாமத்தை என்னுள் ஏற்படுதியருளும்.

**நாள் பூராவும்**

- எனக்களிக்கப்படாத ஆவியா-னவரது கொடைகள், மற்ற-வர்கள் வழியாக வெளிப்படாகும் போது எனது உள்ளரங்க மனநிலை....
- பிறிதொருவரது தலைமைத்-துவத்தின் கீழ் பணியாற்றிட நேரிடும்போது...
- உடைந் உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**25 திங்கள்**

முதலாம்வெளிப்பாடு
எபேசி
4 : 32 - 5 : 8

பதிலுரைப்பாடல்
திரு.பா
1 : 1 - 4, 6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
13: 10 - 17

**பரிசுத்த நற்செய்தி**

ஓய்வு நாளில் இயேசு தொழுகைக் கூடம் ஒன்றில் கற்பித்துக்கொண்டிருந்தார். பதினெட்டு ஆண்டுகளாக... என்று கூறித் தம் கைகளை அவர்மீது வைத்தார். உடனே அவர் நிமிர்ந்து கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்..... ஆண்டவரோ அவரைப் பார்த்து வெளிவேடக்காரரே! நீங்கள் ஒவ்வொருவரும் ஓய்வு நாளில் தம் மாட்டையோ கழுதையையோ தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டபோய்த் தண்ணீர் காட்டுவதில்லையோ? பாருங்கள் ஆபிரகாமின் மகளாகிய இவரை பதினெட்டு ஆண்டுகளாகச் சாத்தான் கட்டி வைத்திருந்தான். இந்தக் கட்டிலிருந்து இவரை ஓய்வு நாளில் விடுவிப்பது முறையில்லையா? என்று கேட்டார் அவர் இவற்றை சொன்னபோது..... (பரி. நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)

**ஒளியில் விழிப்புறுதல்**

ஆவியானவரே! வாரும், வந்து முழுமையாக என்னை மூடி என் ஆண்டவரின் உள்ளாந்தரத்தினை இன்றைய நற்செய்தியில் நான் அறிந்திட எனக்கு உதவி புரிந்தருளும். அப்பா பிதா சொல்வதை செய்வதற்கு ஆண்டவருக்கு நேரம், காலம், நாள் நட்சத்திரம் தேவையில்லை. ஏனெனில் அனைத்தையுமே படைத்தவர் ஆண்டவர். அனைத்தும் அவருக்கே சொந்தம். யாரைக் குணமாக்க வேண்டும் எப்பொழுது செய்ய வேண்டும் என்பதும் அவரது விருப்பம் அப்படியிருக்க மனிதன் வெறுமனே சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு ஒரு நல்ல காரியத்தை செய்யக்கூடிய நாள் பார்க்கிறான். ஆண்டவர் 6 நாட்களாக வேலைசெய்து விட்டு ஏழாவது நாளை ஓய்வு நாளாக நியமித்தது இறைவனோடு ஒன்றித்திருப்பதற்காக. இறைவனோடு ஒன்றிப்பது என்பது இறைவனுக்கு உகந்த விதமாக இறைவிருப்பத்தை நிறைவேற்றி வாழ்வதாகும், இறைவனது விருப்பமானது இன்றைய முதல் வெளிப்பாடடில் பு. சின்னப்பர் கூறுவதுபோன்று பரத்தமை, அனைத்து ஒழுக்கக்கேடுகள், பேராசை இவற்றைக் கைவிட்டு இறைவனுக்கு நன்றி கூறி வாழும் இறைமக்களாக வாழ்தலே ஆகும். அவ்வாறு வாழ்பவர்களே கிறிஸ்துவுக்கும் கடவுளுக்கும் உரிய அரசில் உரிமைப்பேறுடையவர்கள் என்று கூறுகிறார்.

**எமது பக்கம்**

நாமும் அந்த தொழுகைக் கூடத் தலைவனைப் போன்று நல்லது செய்வதற்கு நாள் நட்சத்திரம் பார்ப்பவர்களா? நல்லது செய்பவர்களை சாத்திரம் சம்பிரதாயம் என்று விதண்டாவாதம் பண்ணி அவ்வாறான செயல்களை தடைபண்ணுபவர்களா? அப்படியாயின் நாம் வெட்கப்பட் வேண்டியர்கள். எமது பங்கிலும் நாமனைவரும்ஒன்றுகூடி செயலாற்றுகின்றபோது ஏகப்பட்ட விமர்சனங்கள், வாக்குவாத்கள், பழித்துரைப்புகள் முட்டுக்கட்டைகள், பேராசைகள் போன்றவற்றால் வழி நடத்தப்படுகின்றோமா?.

**செபம்**

அன்பின் இறைவா! நீர் படைத்த அனைத்து நாட்களும்உமக்குகந்த விதமாக வாழ்ந்து உம்மை மகிமைப்படுத்த வேண்டிய நாட்கள் என்பதை உணர்ந்து, நல்லகாரியங்களை செய்ய நாட்களை தள்ளிப்போடாது உடனுக்குடன் செய்து உம்மை நன்றியோடு துதிக்க வரமருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**26 செவ்வாய்**

முதலாம்வெளிப்பாடு
எபேசி
5 : 21 - 33

பதிலுரைப்பாடல்
திரு.பா
128 : 1 - 5

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
13 : 18 - 21

**பரி. நற்செய்தி**

"பின்பு இயேசு இறையாட்சி எதற்கு ஒப்பாயிருக்கிறது? அதை.... எடுத்துத் தம் தோட்டத்தில் இட்டார். அது வளர்ந்து மரமாயிற்று. வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் தங்கின என்று கூறினார். மீண்டும் அவர் இறையாட்சியை எதற்கு ஒப்பிடுவேன்? அது புளிப்பு மாவுக்கு ஒப்பாகும். பெண் ஒருவர் அதை எடுத்து மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்தார். மாவு முழுவதும் புளிப்பேறியது என்றார்".

**ஒளியின் விழிப்பு**

முழு அகிலமும் அசைந்தாடிக்கொண்டிருக்கும் தூய ஆவியானவரே இவ் வேளையில் பெலயீனரான எம் உள்ளங்களைத் தொடும். இயேசு ஆண்டவரின் திருவுளம் தியா-னிக்க எம்மை வழிநடத்தியருளும். இறை அரசின் மகிமையை இயேசு மிகவும் சாதா-ரண உவமைகளால் மக்களுக்கு அறிமுகப்-படுத்துகின்றார். இறை அரசு மக்கள் தங்கள் கண்களால் காணக்கூடிய அளவில் வெளிப்படையாகாது. ஆனால் அது வளர்ந்து கொண்டே இருக்கின்றது. கடுகு மணி, விதைகளில் மிகவும் சிறியது. ஆனால் காலம் செல்லும்பொழுது அது மாபெரும் மரமாக மாறுகின்றது. கிளை-களை விட்டு பெரும் இடத்தைப் பெற்றுக்-கொள்கிறது. இறை படைப்புக்களுக்கு அது தங்குமிடத்தை, அரவணைப்பைக் கொடுகின்றது. இதன் பிரயோசனமோ மிகவும் பெறுமதிவாய்ந்தது.

ஒரு கரண்டி புளிப்பு மாவு பெரிய அளவு மாவை புளிப்பு அடையச் செய்கின்-றது. இதனை மனிதன் கண்டாலும் அதன் செயல்பாட்டை மனிதனால் காணமுடியாது. ஆயினும் செயல்பட்டுமிருக்கின்றது. இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்று இறையாட்சியின் தன்மை-யை ஆண்டவர் இச்சிறு பொருட்-களின் மூலம் தெளிவு படுத்துகின்-றார். வானத்துப் பறவைகள் அதன் கிளையில் வந்து தங்கும் என்ற வார்ததைகளின் மூலம் சகலரையும் ஏற்று அன்புசெய்யும் இறையரசு என்ற எண்ணம் வெளிப்படுகின்றது. வேதனைகளில் கவலைகளில் தனிமையில் ஒதுக்கப்பட்டு வெறுக்-கப்பட்டு தள்ளப்பட்டுள்ள சந்தர்ப்-பங்களில் அடைக்கலம் தர ஆயத்-தமாக இருக்கும் மாபெரும் கடுகு மரத்தைப்போன்றே இறையரசு என்பதை மக்கள் அறிந்துகொண்டு அதில் வாழ இன்றைய நற்செய்தி எமக்கு அறிவூட்டுகின்றது.

**எம்பேரில்**

இன்றைய சமுதாயத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாம் எம்மோடு எம்முள் தங்கி வாழ்ந்துகொண்டிருக்கும் இறை அன்பை அனுபவிக்கின்றோமா? இறையரசைக் கட்டியெழுப்பவும் இறைவனுக்குச் சான்றுபகிரவும் எனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்-களில் மனம் தளராது இறைவனை மகிமைப்படுத்துவோம். இறையரசும் இறைவிருப்பமும் இறை புகழ்ச்சியும் எம் வாழ்வில் ஒளிர்க்க தூய ஆவியின் வரம் வேண்டுவோம். மற்றவர் மத்தியில் புளிப்பு மாவாக மாறி அவர்களையும் இயேசுவோடு இணைக்க முயலுவோம். இவ்வுலக செல்வங்களை வெறுத்து இறைவ-னின் கொடைகளில் நிரம்பி வாழ முயல்வோம்.

**செபம்**

அன்பும் இரக்கமும் நிறைந்த இயேசுவே என்னைச் சூழ்ந்துள்ள அடிமைத்தனத்தி-லிருந்து நான் விடுதலை பெற்று விசுவாசத்துடன் சாட்சி பகிர ன்னை தூய ஆவியின் நாட்களினால் நிரப்பியருளும். தந்தையின் வார்ததையின் முழுநம்பிக்கையுடன் வாழ்ந்து அவர் சித்தம் நிறைவேற்ற வரம் தாரும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**27 புதன்**

முதலாம்வெளிப்பாடு

எபேசி 6 : 1-9

பதிலுரைப்பாடல்

திரு.பா

145 : 10 - 14

நற்செய்திவெளிப்பாடு

புனித லூக்கா

13: 22 -33

**பரிசுத்த நற்செய்தி**

இயேசு நகர்கள், ஊர்கள் தோறும் கற்பித்துக் கொண்டே எருசலேம் நோக்கி பயணம் செய்தார். அப்பொழுது ஒருவர் அவரிடம் 'ஆண்டவரே மீட்புப் பெறுவோர் சிலர் மட்டும் தானா?' என்று கேட்டார். அதற்கு அவர்...... புறம்பே தள்ளப்பட்டிருப்பதையும் பார்க்கும்போது அழுது அங்கலாய்ப்பீர்கள். இறையாட்சியின் போது கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும்தெற்கிலுமிருந்து மக்கள் வந்து பந்தியில் அமர்வார்கள். ஆம் கடைசியானோர் முதன்மையாவர். முதன்மையானோர் கடைசியாவார்".

**ஒளியில் விழிப்புறுதல்**

அன்பின் ஆவியானவரே! உமது அன்பினால் என்னை நிரப்பி அன்பர் இயேசுவின் உள்ளாந்தரத்தைக் காண அருள்புரியும். இன்றைய நற்செய்தியானது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருவதாக அமையவில்லை. காரணம் உம்மோடு உணவு உண்டோம். குடித்தோம். நீர் எங்கள் வீதிகளில் கற்பித்தீர் என்று மக்கள் கூறுகையில் வீட்டுத் தலைவர் கூறுகிறார், நீங்கள் எவ்விடத்தாரோ எனக்குத் தெரியாது, தீங்கு செய்வோரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று இதில் மக்கள் நாங்கள் வீட்டுத் தலைவர் ஆண்டவர். நாமும் கூறலாம். நாம் அன்றாடம் எனது மணித்தியாலம் செய்கிறோம். திருப்பலிகளில் கலந்து கொள்கிறோம. மறுமலர்ச்சியின் வழியாக இறைவார்த்தையை அறிகிறோம். நற்கருணை வழியாக ஆண்டவரின் திரு உடலை உண்டு திரு இரத்தத்தைப் பானமாகப் பருகுகிறோம். எனவே நாம் இறையரசிற்கு நுழைய தகுதியானவர்கள் என்றும் நாங்களே முதன்மையானவர்கள் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறோம. ஆனால் எங்களுக்கே தெரியாது நாங்கள் புறம்பே தள்ளப்பட்டிருப்பது. நற்செய்தியின் ஆரம்பத்தில் ஒருவர் கேட்கும் கேள்விக்கு ஆண்டவர் கூறும் பதில் இடுக்கமான வாயில் வழியே நுழைய வருந்தி முயலுங்கள். இடுக்கமான வாயிலில் நுழைவது இலேசான காரியமல்ல. அன்பு இயேசுவைப் போன்று அன்னையைப் போன்று அன்பு சீடர்களைப்போன்று நொறுங்க வேண்டும். உடைய வேண்டும். முழுமையாக எம்மை பரித்தியாகம் செய்ய வேண்டும். அப்பொழுது அவ்வாயில் வழியாக நுழைந்து எமது முன்னோர்களோடு பந்தியில் அமரும் வரம் எமக்குக் கிடைக்கும்.

**எமது பக்கம்**

இயேசுவைப் போன்று எமது வழிகாட்டிகளைப் போன்று இறைவிருப்பத்திற்க முழுமையாக அடிபணிந்து எம்மைக் கையளித்து வாழ்ந்தால் எம்மாலும் இடுக்கமான வாயில் வழியே நுழைய முடியும். அதற்கு தேவை ஆவியின் நிரப்புதல், வழிநடத்துதல், ஆவியானவரின் வழிநடததுதல் இருந்தாலே ஆண்டவரின் விருப்பத்தை எம்மால் அறிய முடியும். அதற்கு இடமளிக்க முடியும். அப்பொழுது எமக்கு மீட்பும் உண்டு. மீட்பு என்பதை எமது வாழ்வின் நிகழ்வுகளில் நாம் நடந்துகொள்ளும் முறையிலேயே எம்மால் அனுபவிக்க முடியும். இவ்வுலக வாழ்வில் நாம் அனுபவிக்கும் மீட்பே மறு உலக வாழ்வில் எமக்கு கிடைக்கும் மீட்பு.

**செபம்.**

அன்பின் ஆண்டவரே, நிகழ்வனவற்றிற்கு ஆம் எனக் கூறிடவும் நிகழாதவற்றிற்கு இல்லையென்று கூறிவிடவும் வல்லமை பெறும்போது நிச்சயமாக உமது விருப்பத்தைற்கு நாம் இடமளித்திட முடியும். உமது விருப்பம் அன்றி எனக்கு வேறு எதுவும்இல்லை என்று திடமாக வாழ்ந்திடக் கூடிய சக்தியை எமக்குத் தந்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

28 **வியாழன்**

முதலாம்வெளிப்பாடு

எபேசி

2 : 19 - 22

பதிலுரைப்பாடல்

திரு.பா

19 : 1 - 4

நற்செய்திவெளிப்பாடு

புனித லூக்கா

6 : 12 - 19

திருத்தூதர்களான புனித சீயோன், யூதா விழா

**பரி. நற்செய்தி**

அந்நாளில் அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார்.... அவர் தம் சீடர்களைத் தம்மிடம் கூப்பிட்டு அவர்களுள் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் திருத்தூதர் என்று பெயரிட்டார். அவர்கள் முறையே பேதுரு என்று அவர் பெயரிட்ட சீமோன், அவருடைய சகோதரர் அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்லமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் மகன் மகன் யாக்கோபு, தீவிரவாதி எனப்பெயரிட்ட சீமோன், யாக்கோபுவின் மகன் யூதா, துரோகியாக மாறிய யூதாசு இஸ்காரியோத்து என்பவர்களே.... அவரிடமிருந்து வல்லமை வெளிப்பட்டு அனைவர் பிணியையும் போக்கியதால், அங்குத் திரண்டிருந்த மக்கள் யாவரும் அவரைத் தொட முனைந்தனர்.

**ஒளியின் விழிப்பு**

இறைதந்தையின் மறை இரகசியமான அன்பினையும், திட்டத்தையும் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களிடையே காணக்கூடியதாக இருக்கின்றது. மனித சமூதாயத்தை இன்ற அரசின் மகிமையைக்காண எடுத்துச் செல்லவேண்டும் என்ற தாகத்துடன், செயற்பட்ட இறைமகன் தமக்குப் பின்பும் மக்களை இறை அரசிற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பற்காக சீடர்களை தேர்நதெடுத்து ஊக்குவிக்கின்றார். ஒற்றுமை இல்லாத மனங்கள் மத்தியில் இறை நற்செய்தியை எடுத்துரைத்து அனைவரையும் இறை விருப்பத்திற்கு ஒன்று சேர்ப்பது நம் ஒவ்வொரு-வரதும் அழைப்பும் பொறுப்புமாகும் என்பதை எடுத்துரைக்கின்றார். இச்சேவையானது சவால் நிறைந்தது ஒன்றாகும் என்றும், அதனை வெற்றிகொண்டு நிறைவேற்ற *"என் பின்னே வாருங்கள்"* என்று வலியுறுத்தி கூறுகின்றார். இயேசு ஆண்டவர் அகிலத்தார் அனைவருக்குமே அரவது அனுபவத்திற்கு உள்ளாகுவதற்கு அழைப்பு விடுக்கின்றார். அதற்காக வேண்டி தூய ஆவியானவரை எமக்கு தந்துள்ளார். அவருக்கு நிரந்தரமாக விழிப்புற்று செபவாழ்வில் நிலைப்பதற்கும் அவர் விடுக்கின்ற அழைப்பிற்கு வாழ்க்கை வழியாகவே பதில் அளிப்பதற்கும் வல்லமை கேட்டுக்செபிப்போம்.

**எம்பேரில்**

இறையரசிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட எமது வாழ்க்கைக்கு விழிப்புறுவோம். எனது மணித்தியாலத்திற்கு முன்னுரிமை கொடுத்து அப்பா தந்தையின் திருமுன் தோன்றி நிற்பதற்கு தாகம் இருக்கின்றதா? எமது செப வாழ்வைத் திருப்பிப் பார்ப்போம். எமது பெலவீனங்களுக்கு விழிப்புற்று எம்மை வழிநடத்த தூய ஆவியானவருக்கு இடமளிப்போம். இறை தந்தையின் திருமுன் தோன்றி நின்று வல்லமை பெற தாகத்தினை ஏற்படுத்துமாறு செபிப்போம்.

**செபம்**

அப்பா தந்தையே, புத்திரத்தன்மையின் உரிமையுடன் இயேசுவின் சீடர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள நாம் தூய ஆவியானவரின் வல்லமையால் உந்தப்பட்டவர்களாக செயலாற்ற வரம் தாரும். வாழ்வில் ஏற்படும் தீய சோதனைகளிலிருந்து காப்பாற்றியருளும். இயேசுவே உம் பணி செய்வதற்கு தூய ஆவியானவரின் வல்லமையையும் சக்தியையும் தந்து எங்களை வழிநடத்தியருளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**29 வெள்ளி**

முதலாம்வெளிப்பாடு
பிலிப் 1 : 1-11

பதிலுரைப்பாடல்
திரு.பா
111 : 1 - 6

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
14: 1 - 6

**பரிசுத்த நற்செய்தி**

ஓய்வு நாள் ஒன்றில் இயேசு பரிசேயர் தலைவர் ஒருவருடைய வீட்டிற்கு உணவருந்த சென்றிருந்தார்.... அவர்கள் அமைதியாக இருந்தனர். இயேசு அவருடைய கையைப்பிடித்து அவரை நலமாக்கி அனுப்பிவிட்டார். பிறகு அவர்களை நோக்கி "உங்களுள் ஒருவர் தம் பிள்ளையோ கிணற்றில் விழுந்தால் ஓய்வு நாள் என்றாலும் அதை உடனே தூக்கிவிட மாட்டாரா?" என்று கேட்டார். அதற்கு பதில் சொல்ல அவர்களால் முடியவில்லை.

**ஒளியில் விழிப்புறுதல்**

அன்பின் தூய ஆவியானவரே, அனைவரின் உள்ளாந்தரத்தை அறியக் கூடிய இயேசுநாதரின் உள்ளாந்தரத்தை நாம் காண எமக்குத் துணை புரிந்தருளும். இயேசுநாதர் பரிசேயர் தலைவரின் வீட்டிலிருந்த அனைவரின் உள்ளாந்தரத்தை அறிந்தார். அன்று ஒரு ஓய்வுநாள். ஓய்வு நாள் என்றாலே யூதருக்கு ஒரு அதிவிசேடமான நாள். சட்டதிட்டங்களை அன்றைய நாளில் கடைபிடிக்காவிட்டால் அது தேவகுற்றம் என்பதால் அவர்கள் பாரம்பரியமாக கடைபிடித்து வரும் ஒருசெயல். பழைய ஏற்பாட்டில் முதல் 5 புத்தகத்திலுமுள்ள சட்டங்களே அவை. இதை பஞ்சாங்கம் என்பார்கள். இது இறைசட்டமாக இருந்தாலும் காலப்போக்கில் இந்த சட்டங்களே அவர்களது கடவுளாக மாறிவிட்டது. அத்துடன் இதைக் கற்பித்த மூப்பர்கள் அவர்-களின் இலாபம் வசதிக்கேற்ப மாற்றியே மக்களுக்குக் கற்பித்தார்கள். இவற்றையெல்லாம் ஒழுங்கு படுத்த வந்த இயேசுநாதரை இவர்கள் ஏற்றுக் கொள்வது பெரும் சவாலாக இருந்தது. ஓய்வு நாள் சட்டத்தைத் திருத்தும் இயேசுவின் உள்-ளாந்தரம் இறைவிருப்பத்தை நிறைவேற்றுவதே அவரின் உணவாக இருந்தது.

**எம்பேரில்**

*நீங்கள் தூய ஆவியால் வழிநடத்தப்பட்டால் திருச்சட்டத்திற்கு உட்பட்டவர்களாக இருக்கமாட்டீர்கள்* (கலா 5:18) கலாத்தியருக்கு புனித பவுல் எழுதிய மடலில் இவ்வாறு எழுதியுள்ளார். இறை சட்டத்தை இவ்வுலகிற்கு நிலைநிறுத்த வந்த இயேசுவை, உயிர்த்த இயேசுவை சந்தித்த புனித பவுல் இறையேசுவின் உள்ளாந்தரத்தை நன்கு அறிந்திருந்தவர். அன்று கலாத்தியருக்கு எழுதியது இன்று எமக்குப்பொருந்தும் என்பதில் சந்தேகமில்லை. அன்பார்ந்தவர்களே, இன்று எமது நிலை என்ன? நாம் உண்மையிலேயே தூய ஆவிக்கு கீழ்படியும், அவரின் வழிநடத்துதலுக்கு இடமளிக்கும் நாமும் சட்டதிட்டங்களை எவ்வாறு கையாளுகிறோம். சற்று எம்மை ஆராய்ந்து பார்ப்போம். எம்மில் எதுவும் குறைகள் இருந்தால் உடன் மனம் திருந்துவோம். இறை சட்டதிட்டங்களை ஆராய்ந்து அதை எமது உணவாக்கி இயேசுவின் பாதையில் சென்று இறைவன் வசம் அடைய எம்மை திருத்திய வாழ வரம்வேண்டுவோம்.

**செபம்.**

அன்பின் இறைவா, அன்றைய மக்களைப்போல் கடின மனதுள்ளவர்களாக வாழ்ந்துக்கொண்டு இருக்கும் என்னை மாற்றி உமக்கு உகந்த மகனாக, மகளாக வாழ்வதற்கு எம்முள் இருக்கும் குறைகளை எமக்குக் காட்டி நிறை உண்மையை நோக்கி வழிநடத்தியருளும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

**30 சனி**

முதலாம்வெளிப்பாடு
பிலிப் 1:18 - 26

பதிலுரைப்பாடல்
திரு.பா
42 : 1-2, 4.

நற்செய்திவெளிப்பாடு
புனித லூக்கா
14: 1, 7 - 14.

### பரிசுத்த நற்செய்தி

ஓய்வு நாள் ஒன்றில் இயேசு, பரிசேயர் தலைவர் ஒருவருடைய வீட்டிற்கு உணவருந்தச் சென்றிருந்தார். பரிசேயர் தலைவர் விருந்தினர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தேர்ந்து கொண்டதை நோக்கிய இயேசு, அவர்களுக்குக் கூறிய அறிவுரை 'ஒருவர் உங்களைத் திருமண விருந்துக்கு அழைத்திருந்தால், பந்தியில் முதன்மையான இடத்தில் அமராதீர்கள். ஒருவேளை உங்களிடம் மதிப்பிற்குரிய ஒருவரையும் அவர் அழைத்திருக்கலாம். உங்களையும் அவரையும் அழைத்திவர்கள உங்களிடத்தில் இவருக்கு இடத்தை விட்டுக்கொடுங்கள் என்பார். அப்பொழுது நீங்கள் வெட்கத்தோடு கடைசி இடத்திற்குப் போக வேண்டியிருக்கும். நீங்கள் அழைக்கப்பட்டிருக்கும்போது போய்க் கடைசி இடத்தில் அமருங்கள். அப்பொழுது உங்களை அழைத்தவர் வந்து உங்களிடம் நண்பரே முதல் இடத்திற்கு வாரும்! எனச் சொல்லும்போது உங்களுடன் பந்தியில் அமர்ந்திருப்பவர்கள் யாவருக்கும் முன்பாக நீங்கள் பெருமையடைவீர்கள். தம்மைத்தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்-தப்படுவர். தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர்"

### ஒளியில் விழிப்புறுதல்

என் ஆருயிர் நண்பரான தூய ஆவியானவரே, இந்நிகழ்ச்சியுள் இயேசுவின் பால் என்-கண், மனம், உள்ளத்தைப் பதியச்செய்தருளும். தம்மைத் தாழ்த்திக் கொள்பவர்கள் எந்த இடத்திலும் உயர்த்தப்படுவார்கள். தம்மை உயர்த்திக் கொள்பவர்கள் எந்த இடத்திலும் தாழ்த்தப்படுவார்கள் என்பதை இந்த உவமையின் மூலம் வெளிப்படுத்துகின்றார். ஆகவே இயேசுநாதர் இறைவனின் மகனாக இருந்தும், சீஷர்களுக்குப் பாதம் கழுவும் அன்பினால் பாதங்களைக் கழுவி தம்மைத் தாழ்த்திக் காட்டினார். உலக அரசனான பிலாத்து முன்னிலையில் தாழ்ந்து சிலுவை மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டால் அவரது தாழ்மையினால் மக்களுக்குக் கடைசி பரியந்தம் அன்பு செய்து சிலுவை மரணத்திற்கு உள்ளாகினார். சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டதனால் உலக மக்களை மீட்புப் பெறச் செய்தார். தந்தையின் திட்டத்தை விருப்பத்ததை தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டதனால் தமது உயிர்ப்பின்மூலம் முழு உலகத்திலும், மேன்மை, மாட்சிமை பெற்று உயர்த்தப்பட்டார். இறைவனின் தந்தையின், வலது பாரித்தில் அமரும் பாக்கியத்தைப்பெற்றார்.

### எம் பேரில்

எமக்குக் கிடைத்துள்ள அழைப்பின் பொறுப்புக்களில் முதலிடத்தை நோக்காமல் இறைவனின் விருப்பத்திற்கு எமது பணியைத் தாழ்மையுடன் மனமுவந்து ஏற்றுக் கொள்ளும்போது எம்மையும் இறைவன் உயர்த்துவார். எனவே இறைவனின் விருப்பதிற்கு இடமளிக்கவும். தாழ்ச்சியாக வாழவும் எமக்கு வரமருளும்படி தூய ஆவியானவருக்குள் விழிப்புற்று கேட்போம்.

### செபத்திற்கு உள்ளாகுதல்

அப்பா தந்தையே! உமது அழைப்பிற்குப் பதில் கொடுக்கும் எந்த வேளையிலும் மேன்மையை மகிமயைத் தேடாமல் தாழ்மையான உள்ளத்துடன் உமக்கும் பணிபுரிய வரமருளும் ஆமென்.

கலைமான் நீரோடைகளுக்காக
ஏங்கித் தவிப்பதுபோல், கடவுளே!
என் நெஞ்சம் உமக்காக ஏங்கித்
தவிக்கின்றது

(தி. பாட 42:1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

**ஐப்பசி**

31 **ஞாயிறு**

முதலாம்வெளிப்பாடு
சா.ஞான
11 : 22-12:2

பதிலுரைப்பாடல்
திரு.பா
145 : 1 - 2,
13 - 14

இரண்டாம்வெளிப்பாடு
2தெசலோசி
1 : 11 - 2 : 2

நற்செய்தி
வெளிப்பாடு
புனித லூக்கா
19: 1 - 10
பொ. கா. 31வது
ஞாயிறு

ஒரே மீட்பரும், ஒரோ ஆண்டவர் வெளிப்பாடாக்குகின்ற அன்பின் இதயத்திற்குப் பயணமாவதற்ாக எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள அழைப்பானது, பாக்கியம் மிக்கதாகும். ஆசீர்வாதமாகும். ஆனபடியால் அந்த ஆசீரை உரிமையாக்கிக் கொண்டு ஆண்டவருக்குரிய இடத்தை அவருக்கே கொடுப்போம். அவர் எம்மைப் பாதுகாக்கின்றார். அவர் எமது உள்ளங்களை ஊடுருவி ஆராய்ந்தறிந்து, எமது பாவங்களுக்கு மன்னிப்பளித்து அப்பா பிதாவானவரிடம் எம்மை இட்டுச்செல்கின்றார். எம்மிடமிருந்து வெளிப்பாடாகுகின்ற இறை புத்திரத் தன்மையை மறைத்து வைத்திருக்காது, எமக்கென்று மாத்திரம் தனித்து வைத்திருக்காது வெளிப்பாடாக்குவோம். அபிமானம் மிகுந்த இறை புத்திரத்தன்மைக்குரிய அன்பிற்குச் சாட்சி பகர்வோம். மற்றவர்களைத் தீர்ப்பிடாதவாறு அனைவருமே இறைவனுடைய மக்களாவர் என்று ஏற்றுக்கொள்வோம். இயேசு மனிதர்களது விருப்பத்தை நிறைவேற்றாமல், தந்தையின் விருப்பத்தை மாத்திரம் நிறைவேற்றியது போல் இறை விருப்பத்தை மாத்திரம் நிறை வேற்றுவதற்கான வல்லமையை ஆவியானவரிடம் வேண்டுவோம்.

**முதலாவது வெளிப்பாட்டிலிருந்து**

நீர் எல்லாம் வல்லவராய் இருப்பதால் எல்லார் மீதும் இரங்குகின்றீர். மனிதர்கள் தங்களுடைய பாவங்களை விட்டு மனம் திரும்பும்பொருட்டே நீர் அவற்றைப் பார்த்தும் பாராமல் இருக்கின்றீர். படைப்புக்கள் அனைத்தின்மீதம் நீர் அன்பு கூர்கிறீர். நீர் படைத்த எதையும் வெறுப்பதில்லை.... உமது திருவுளமின்றி எதுதான் நீடித்திருக்க முடியும்?..... ஆண்டவரே உயிர்கள் மீது அன்பு கூர்கின்றவரே, நீர் எல்லாவற்றையும் வாழவிடுகின்றீர். ஏனெனில் அவையாவும் உம்முடையன. உம்முடைய அழியா ஆவி எல்லாவற்றிலும் உள்ளது. ஆகையால், தவறு செய்பவர்களைச் சிறிது சிறிதாய்த திருத்துகின்றீர். எவற்றால் பாவம் செய்கிறார்களோ அவற்றை நினைவுபடுத்தி அவர்களை எச்சரிக்கின்றீர்....

**ஒளியில் விழிப்புறுதல்**

எல்லாம் வல்லவரான இறைவனானவர் கள்ளங் கபடற்ற திறந்த மனம் உடையவராகவும், அனைவரையும் அன்பு செய்யக்கூடியவராகவும் இருப்பதோடு, மனிதர்கள் தங்கள் பாவங்களை விட்டு மனம் திரும்பும் பொருட்டே இறைவன் மனிதர்கள் மீது இரக்கங்கொள்கின்றார் என்று இந்த நூலாசிரியர் கூறுகின்றார்.

இறைசாயலைத் தாங்கிக் கொண்டுள்ள முழுப்படைப்புமே தமது செயற்பாடுகளின் வழியாக படைப்பாளரது வல்லமையை, மகிமையை, அன்பினை கனிவிரக்கத்தினை வெளிப்பாடாக்குகின்ற விதமானது விந்தைக்குரியதாகும். பாவிகள் பெலவீனர்கள், தாழ்நிலையிலுள்ளளோர் அனைவர் மீதும் படைப்பாளரது அன்பு, இரக்கம் வழிந்தோடிவருகின்றது. நாம் பெலயீனத்தில் விழுகின்ற சமயங்களில், தவறினை ஆவியானவர் காண்பித்த போதிலும் அதன் விழிப்புறாது இருக்கினற் சந்தர்ப்பங்கள் தான் எத்தனை? நாம் உளந்திறவாதிருந்த போதிலும் ஆண்டவரது அன்பு வழிந்தோடி வந்த வண்ணமாகவே இருக்கின்றது.

மனிதர்கள் தங்களுடைய பாவங்களை விட்டு மனம் திரும்பும் பொருட்டே நீர் அவற்றைப் பார்த்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராமல் இருக்கின்றீர். படைப்புக்கள் அனைத்தின் மீதும் நீர் அன்பு கூர்கின்றீர். நீர் எதையாவது வெறுத்திருந்தால் அதைப் படைத்திருக்கவே மாட்டீர்?

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

இயேசு எரிக்கோவுக்குச் சென்று.... கொண்டிருந்தார். அங்கு சக்கேயு என்னும் பெயருடைய செல்வர் ஒருவர் இருந்தார். அவர் வரி தண்டுவோருக்குத் தலைவர். இயேசு யார் என்று பார்க்க விரும்பினார்... இயேசு அந்த இடத்திற்கு வந்தவுடன், அண்ணாந்து பார்த்து அவரிடம் சக்கேயு விரைவாய் இறங்கி வாரும். இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும் என்றார்.... சக்கேயு எழுந்து நின்று 'ஆண்டவரே என் *உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகின்றேன்'* என்று அவரிடம் கூறினார். இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று..." என்று சொன்னார்.

**ஒளியில் விழிப்புறுதல்**

வரி தண்டுவோர், பாவிகள், ஏழைகள் பேரில் இறைவனது அன்பு இறைமகன் வழியாக வழிந்தோடுகின்றது. என்றுமே வற்றாத அவரது மன்னிப்பளிப்பதன் அன்பானது, இதயமானது புத்திரத்தன்மையின் ஆழத்தை ஊடுருவிச் செல்கின்றது. அவர் அனைத்து இதயங்களையும் ஊடுருவிக் கண்டவாறு தந்தையின் விருப்பத்தை மாத்திரம் நிறைவேற்றுகின்றார். தந்தையின் அன்புக்குச் சாட்சி பகர்கின்றார். உலக பெறுமதியான புறத்தோற்றப் பெறுமதிகளை வழிபாடுகளை, நீதி நியமங்களை பூரணமாக்குகின்றார். அவற்றிற்குப் புதியதொர் பெறுமதியை அளிக்கின்றார். புத்திரத்தன்மையின் ஆழம் சங்கமமாகுதல், ஒற்றுமைப் படுதலாகும். மன்னிப்பளிப்பதே சங்கமமாகுதலின் மாபெரும் செயற்பாடாகுகின்றது.

**எனது புத்திரத்தன்மை**

.....விரைவாய் இறங்கி வாரும். இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்!

- அத்தகைய அழைப்பினை இன்றுஎனக்கு விடுப்பாரேயானால்......எனது உணர்வு எண்ணங்கள்,பிரதிச்செயல் எவ்வாறானதாக அமையும்?
- எத்தகைய உலக பெறுமதிகளால் நிரம்பியுள்ளேன்?
- எனது பெலயீனம் என்ன? மனம் வருந்துவோம்...
- அன்போடு அவரை ஏற்றுக் கொண்டாலும், எனது விருப்பத்திற்காக முதலிடமளிக்கின்றேன். சக்கேயுவைப் போல எப்போதும் இயேசுவோடு தொடர்பு வைத்திருப்பதற்கான தாகம் என்னுள் இருக்கின்றதா?

**இரண்டாவதுவெளிப்பாட்டிலிருந்து**

.....உங்களுக்காக என்றும் இறைவனிடம் வேண்டுகின்றோம். நம் கடவுள் நாம் விடுத்த அழைப்புக்கு உங்களைத் தகுதியுள்ளவராக்குவாராக! உங்கள் நல்லெண்ணம் ஒவ்வொன்றையும், நம்பிக்கையால் தூண்டப்படும் ஒவ்வொரு செயலையும் தம் வல்லமையால் நிறைவு செய்வராக! இவ்வாறு நம்கடவுளும் ஆண்டவரும், இயேசுவின் பெயருக்கும் அவரால் உங்களுக்கும் மேன்மை உண்டாகுக!

**ஒளியில் விழிப்புறுதல்**

பவுலடிகளார் செபத்தின் வல்லமையை அனுபவித்தவராக அதற்குச் சாட்சிபகர்கின்றார். ஆண்டவரது பெயரை மகிமைப் படுத்துவதற்காக அழைப்பு விடுக்கின்றார்.. அவரது வேண்டுதலை எமது வேண்டுதலாக்கிக் கொள்வோம்...

தடுக்கி விழும் யாவரையும் ஆண்டவர தாங்குகின்றார். தாழ்த்தப்பட்ட யாவரையும் தூக்கி விடுகின்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

பெயர் : ..................................................................................................

சஞ்சிகையை அனுப்ப வேண்டிய விலாசம் : ........................................................

..................................................................................................

................ஆம் ஆண்டு...................... மாதம் தொடக்கம் ஆறு/பன்னிரெண்டு மாதங்களுக்காக ரூபா..............................ஐ.......... இலக்கமுடைய காசுக்கட்டளையை /காசோலையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

..........................................

திகதி :................................. கையொப்பம்

---

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகை

❖ தபால் கட்டணத்துடன் : ஆறு மாதங்கள் - ரூ. 110.00
பன்னிரெண்டு மாதங்கள் - ரூ. 220.00

❖ காசுக்கட்டளைகள்/காசோலைகள் : "கிது தன புபுதுவ" என்ற பெயருக்கு மாத்திரம் அனுப்பவும்.

❖ பணம் செலுத்தும் அலுவலகம் : வல்பொல (மே. மா.)

❖ புபுதுவ நடுநிலையம் : ஸ்ரீ பிரசங்காராமய, வல்பொல, ராகம.
தொலைபேசி : 011-2230300 ப.்.க்ஸ் : 011-2231490
மின்தபால் (E-mail) : pubuduwa@wow.lk
Website : www.kithudanapubuduwa.net
அச்சகம் : புபுது அச்சகம்,
452, தேசிய பெசிலிக்கா மாவத்தை, தேவத்தை, ராகம.
தொலைபேசி : 011-2958439

❖ பகிர்ந்தளித்தல் : "புபுதுவ" வெளியீடு - பரப்புதல் சேவை
ஸ்ரீ பிரசங்காராமய, வல்பொல, ராகம.
தொலைபேசி : 011-2230300

❖ சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள் :
- ஸ்ரீ ரம்யா ராமய, பாலக்குடா, தலவில கோயில்.
- ஸ்ரீ கிறிஸ்து தர்மாராமய, தெதுரு ஓயா, மானுவன்கம, சிலாபம்.
- புபுது நிவச, தம்பறாவில, வைக்கால்.
- புபுது நிவச, தங்கொட்டுவ.
- புபுது நிவச, 386, பிரதான வீதி, நீர்கொழும்பு.
- கிறிஸ்து கேந்திரய, ஜா-எல.
- 7வது மாடி, 6வது சின்னப்பர் நடுநிலையம், கொழும்பு-11.

விலை ரூ. 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டைப்பட கதை ஐப்பசி மாதம்**

உலகத்தினுள் முழுமையை எதிர்பார்க்கும் சுய பாதுகாப்பு - சுய வெளிப்பாடு - சுய மகிமையை தேடிச் செல்லும், அவ்வழியில் ஜெரிக்கோவில் வாழ்வது முழுமை என நினைத்துப்போட்டியில் ஈடுபட்டிருக்கும் நகரத்தினூடாக இயேசுநாதர் பயணம் செய்கிறார். அவர் யார் என்று தேடும் மனிதர்களுள் என்னைப் பார்த்து

**"சக்கேயு, விரைவாய் இறங்கி வாரும், இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்"**

என்றார். அவர் விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச்சியோடு அவரை 'வரவேற்றார்.... சக்கேயு எழுந்து நின்று,

**"ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன்; எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்"**

என்று அவரிடம் கூறினார். இயேசு அவரை நோக்கி

**"இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று"**

என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1391 - 5975